முழுப் பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

# 44 — இஸ்லாம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

www.Edukinniya.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

| | | |
|---|---|---|
| ඉස්ලාම් I<br>இஸ்லாம் I<br>Islam I | 44 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள்:**
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. இஸ்லாம் என்ற சொல் 'ஸில்ம்' என்ற அறபுச் சொல்லிலிருந்து பிறந்துள்ளது. இதன் நேரடிக் கருத்து
   (1) இஸ்லாமாகுதல் (2) சாந்தி (3) தனித்துவம்
   (4) ஏகத்துவம் (5) தூதுத்துவம்

2. தொழுகையின் மூலம் மனிதன் அடையும் பயன்களுள் ஒன்றென அல் குர்ஆன் குறிப்பிடுவது யாது?
   (1) தொழுகை தீய செயல்களிலிருந்து தடுக்கின்றது.
   (2) தொழுகை சமத்துவத்தைப் போதிக்கின்றது.
   (3) தொழுகை ஓர் உடற்பயிற்சியாகும்.
   (4) தொழுகையை ஐவேளையும் நிறைவேற்ற வேண்டும்.
   (5) தொழுகை ஒற்றுமையை ஏற்படுத்தும்.

3. இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்கள்
   (1) அல் குர்ஆனும் ஸுன்னாவுமாகும். (2) அல் குர்ஆனும் இஜ்மாஉமாகும்.
   (3) ஸுன்னாவும் இஜ்திஹாதுமாகும். (4) இஜ்மாஉம் கியாஸுமாகும்.
   (5) ஸுன்னாவும் இஜ்மாஉமாகும்.

4. மனிதன் நிறைவேற்ற வேண்டிய மூன்று பணிகளைக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
   (1) ஈமான், இபாதத், இமாரத் (2) இபாதத், இக்லாஸ், கிலாபத்
   (3) ஈமான், இமாரத், தொழுகை (4) ஈமான், இக்லாஸ், இபாதத்
   (5) இபாதத், இமாரத், கிலாபத்

5. "முஹம்மது (ஸல்) அவர்களது பாதத்தில் ஒரு முள் தைப்பதைக் கூட நான் விரும்பமாட்டேன்", என்று அபூஸுஃப்யானிடம் கூறிய ஸஹாபி
   (1) ஸைத் இப்னு தஸினா (ரழி) (2) அர்கம் (ரழி) (3) பிலால் (ரழி)
   (4) அலி (ரழி) (5) முஆத் இப்னு ஜபல் (ரழி)

6. தஜ்ஜால் வெளிப்படும்போது நீதியான ஆட்சியை நிலைநாட்டுபவர் யார்?
   (1) இமாம் மஹ்தி (2) துல்கர்னைன் (3) ஈஸா (அலை)
   (4) மூஸா (அலை) (5) முஹம்மது (ஸல்)

7. மிக உயர்ந்தது என அறிஞர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ள ஷபாஅத் எது?
   (1) நரகில் வீழ்ந்து தண்டனை அனுபவிக்கும் முஃமின்களில் ஒரு பகுதியினரை விதிக்கப்பட்ட தண்டனை முடியுமுன்னரே நரகிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கான ஷபாஅத்.
   (2) சுவர்க்கவாசிகள் சிலருக்கு சுவர்க்கத்தில் அவர்களது தரத்தை உயர்த்துவதற்கான ஷபாஅத்.
   (3) அனைத்து மனிதர்களுக்காகவும் மஹ்ஷர் வெளியின் பயங்கரத்திலிருந்து பாதுகாக்கவும், விசாரணையின்றி சுவர்க்கம் செல்ல அனுமதிக்குமாறு செய்யப்படும் ஷபாஅத்.
   (4) முஃமின்களில் ஒரு பிரிவினரை விசாரணையின்றி சுவர்க்கம் செல்ல அனுமதிக்குமாறு செய்யப்படும் ஷபாஅத்.
   (5) நபி (ஸல்) அவர்கள், தனக்கும் அனைத்து மனிதர்களுக்காகவும் செய்யும் ஷபாஅத்.

8. கால மாற்றம், சமூகங்களின் தன்மை என்பவற்றுக்கேற்ப வேறுபட்டதாக அமைவது,
(1) தீனாகும். (2) ஈமானாகும். (3) இஸ்லாமாகும்.
(4) அஸ்ஸுன்னாவாகும். (5) ஷரீஆவாகும்.

9. அல் குர்ஆனை அடியொற்றி வளர்ந்த கலைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) உலூமுல் குர்ஆன் (2) உலூமுல் ஹதீஸ் (3) இல்முத் தப்ஸீர்
(4) உஸூலுல் பிக்ஹ் (5) உஸூலுத்தீன்

10. இஸ்லாமிய வரலாற்றில் இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டதாகக் கருதப்படும் காலப்பிரிவு
(1) ஹிஜ்ரி 1 ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பிரிவாகும்.
(2) ஹிஜ்ரி 3 ஆம் நூற்றாண்டாகும்.
(3) தாபிஈன்களின் காலப்பிரிவாகும்.
(4) ஹிஜ்ரி 4 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பிரிவாகும்.
(5) நவீன காலப்பிரிவாகும்.

11. குதிரைக்கும் ஸகாத் விதியாக்கிய கலீபா
(1) அபூபக்ர் (ரழி) (2) முஆவியா (ரழி) (3) உஸ்மான் (ரழி)
(4) அலி (ரழி) (5) உமர் (ரழி)

12. முஃதஸிலா கோட்பாட்டை ஏற்க மறுத்ததன் காரணமாக கலீபா மஃமூனால் துன்புறுத்தப்பட்ட இமாம்
(1) இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) (2) இமாம் மாலிக் இப்னு அனஸ் (ரஹ்)
(3) இமாம் அபூ ஹனீபா (ரஹ்) (4) இமாம் ஷாபிஈ (ரஹ்)
(5) இமாம் புஹாரி (ரஹ்)

13. அலி (ரழி) அவர்களைக் கொலை செய்த இப்னு முல்ஜிமை புகழ்ந்து பாடிய கவாரிஜ்களின் ஆஸ்தானக் கவிஞர்
(1) வாஸில் இப்னு அதா (2) இம்ரான் இப்னு ஹத்தான்
(3) ஹஸ்ஸான் இப்னு தாபித் (4) வரக்கத் இப்னு நவபல்
(5) அப்துல்லாஹ் இப்னு ரவாஹா

14. மதங்கள் மனிதனை ஆன்மாவைப் பிரதானப்படுத்தியே நோக்குகின்றன. அந்த வகையில் இஸ்லாம் மனிதனை எவ்வாறு நோக்குகிறது?
(1) உடல் + அறிவு + ஆன்மா (2) உயிர் + சக்தி + உடல் (3) உடல் + அறிவு
(4) அறிவு + ஆன்மா + உயிர் (5) உடல் + ஆன்மா

15. "மனிதனுக்கு ஒரு பள்ளத்தாக்கு நிறைய தங்கம் இருந்தாலும் தனக்கு இரண்டு பள்ளத்தாக்குகள் இருக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான்" என்று கூறிய நபி (ஸல்) அவர்கள் அவனது வாயை எது நிரப்பும் என்று கூறினார்கள்?
(1) வெள்ளி நாணயங்கள் (2) மண் (3) தங்கம்
(4) கூழாங்கற்கள் (5) உலகின் கழிவுப் பொருட்கள்

16. ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் வழிமுறையைப் பின்பற்றித் தோன்றிய தரீக்கா எது?
(1) காதிரியா தரீக்கா (2) திஜானியா தரீக்கா
(3) நக்ஷபந்தியா தரீக்கா (4) ஷாதுலிய்யா தரீக்கா
(5) சனூஸியா தரீக்கா

17. "எனக்குரிய ரிஸ்க் எனது ஈட்டியின் நிழலில் தான் இருக்கின்றது" என்பது
(1) ஒரு ஸஹாபியின் கூற்றாகும்.
(2) முஹம்மது (ஸல்) அவர்களின் கூற்றாகும்.
(3) ஒரு இஸ்லாமிய அறிஞரின் கூற்றாகும்.
(4) ஈஸா (அலை) அவர்களின் கூற்றாகும்.
(5) லுக்மான் (அலை) அவர்களின் கூற்றாகும்.

18. 40 மாடுகளை சொந்தமாக வைத்திருக்கும் ஒருவர் ஸகாத்தாகக் கொடுக்க வேண்டியது
(1) இரண்டு வருடம் பூர்த்தியான ஒரு மாடு
(2) ஒரு வருடம் பூர்த்தியான மூன்று மாடுகள்
(3) இரண்டு வருடம் பூர்த்தியான இரண்டு மாடுகள்
(4) இரண்டு வருடம் பூர்த்தியான இரண்டு ஆடுகள்
(5) ஒரு வருடம் பூர்த்தியான இரண்டு ஆடுகள்

19. துறைசார் அறிஞர்களால் மிக உறுதியான, ஆதாரபூர்வமான ஹதீஸாக ஏற்றுக்கொள்ளப்படுவது
(1) ஹதீஸ் மர்ஃபூ.
(2) ஹதீஸ் முதவாதிர்
(3) ஹதீஸ் ஆஹாத்
(4) ஹதீஸ் முஅல்லக்
(5) ஹதீஸ் மவ்கூப்

20. திருமணத்தின்போது மணமகனுக்குரிய நிபந்தனைகளில் ஒன்று
(1) மணப்பெண்ணின் குடும்பத்திற்கு அறிமுகமானவராக இருத்தல்
(2) நிறைந்த செல்வ வளத்தைக் கொண்டிருத்தல்
(3) மணப்பெண்ணுக்கு அஜ்னபியாக இருத்தல்
(4) மணப்பெண்ணுக்கு மஹ்றமியாக இருத்தல்
(5) சுகதேகியாக இருத்தல்

More Papers & Online Exams
www.Edukinniya.lk

21. இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின்படி அஸ்ஹாபுல் புருளில் **அடங்காதவர்**
(1) கணவன்
(2) மனைவி
(3) மகள்
(4) மகளின் மகள்
(5) மகனின் மகள்

22. நபி (ஸல்) அவர்களினதும், குலபாஉர்ராஷிதூன்களினதும் காலங்களில் தண்டனைகள் மிகக் குறைவாக அமுல்படுத்தப்பட்டமைக்கான காரணங்களில் ஒன்று
(1) இஸ்லாமிய தண்டனைகள் சட்ட அந்தஸ்து பெறாமை ஆகும்.
(2) தண்டனை முறைகள் தெளிவாக வரையறுக்கப்படாமை ஆகும்.
(3) குற்றங்கள் நிகழாமல் இருக்கக் கூடிய சூழல் ஏற்படுத்தப்பட்டமை ஆகும்.
(4) குற்றங்கள் நிரூபிக்கப்படுவதில் ஏற்பட்ட தடைகள் ஆகும்.
(5) ஆட்சியாளர்களின் மன்னிக்கும் மனப்பான்மை ஆகும்.

23. பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற் கொள்க.
A - அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்பது தொடர்பான வசனங்கள்
B - வானத்தையும் பூமியையும் படைத்தவன் அல்லாஹ்வே என்பது தொடர்பான வசனங்கள்
C - 'எல்லாம் அழிந்து போகும், உமது இறைவனின் திருமுகத்தைத் தவிர' என்ற வசனம்
D - 'அல்லாஹ் யாவற்றையும் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான்' என்ற வசனம்
E - 'ஜின் வர்க்கத்தையும், மனித வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை' என்ற வசனம்
மேலுள்ள கூற்றுகளுள் அல் குர்ஆனின் முதஷாபிஹாத்தான வசனங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, C (2) A, B, E (3) A, C, D (4) B, C, D (5) B, D, E

24. பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.
A - திருமணப் பொருத்தம் பார்த்தல்
B - கொலைக்கு 'தியத்' வழங்குதல்
C - களவெடுத்தவனின் கையைத் துண்டித்தல்
D - திருமணத்தின்போது வலீமா கொடுத்தல்
E - கஃபாவை தவாப் செய்தல்
மேலுள்ளவற்றுள் இஸ்லாத்துக்குமுன் அரபிகளிடம் காணப்பட்டு, பின்னர் இஸ்லாம் அங்கீகரித்த உர்ப் வழக்காற்றுகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, C, E

25. பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.
A - நபி (ஸல்) அவர்களது வபாத்தின் யதார்த்தம் குறித்து அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியோருக்கிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள்
B - நபிக்குப் பின் யாரைக் கலீபாவாகத் தெரிவுசெய்வது என்பதில் தோன்றிய கருத்து வேறுபாடுகள்
C - 'தலாக் சொல்லப்பட்ட பெண்கள் மூன்று குரூஃ காலம் வரை எதிர்பார்க்கவும்' என்ற வசனத்தில் தோன்றிய கருத்து வேறுபாடுகள்
D - ஸகாத் வழங்க மறுத்தோர் குறித்துத் தோன்றிய கருத்து வேறுபாடுகள்
E - உஹது யுத்தத்தில் எங்கிருந்து யுத்தம் செய்வது என்பதில் தோன்றிய கருத்து வேறுபாடு
மேற்குறிப்பிட்டவற்றுள் நபி (ஸல்) அவர்களது வபாத் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஸஹாபாக்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, C, E

26. பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற் கொள்க.

A - இஜ்மாஉ மேற்கொள்ளப்படுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட முஜ்தஹிதுகள் இருக்க வேண்டும்.
B - முஜ்தஹிதுகளின் முடிவுகள் அவர்களின் வபாத்திற்குப் பின்னர்தான் பின்பற்றப்பட வேண்டும்.
C - முஜ்தஹிதுகளின் ஏகோபித்த முடிவு பெறப்படல் வேண்டும்.
D - முஜ்தஹிதுகள் தமது முடிவை வார்த்தைகளினாலும், செயல்களினாலும் புலப்படுத்த வேண்டும்.
E - இஜ்மாஉ என்பது தொடர்ந்தேர்ச்சியாக முஜ்தஹிதுகளின் சொந்த அபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகிறது.

மேற்குறித்த கூற்றுகளுள் இஜ்மாஉவிற்கான நியதிகள் தொடர்பிலான சரியான கூற்றுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D (5) B, C, E

27. பின்வரும் அட்டவணையிலுள்ள பதங்களைக் கவனத்திற் கொள்க.

| | | |
|---|---|---|
| A - அஸபா | B - திம்மி | C - அல் அர்ஹாம் |
| D - மஹ்ரம் | E - வஸிய்யத் | F - பைஅத் |
| G - ஹஜ்புன் நுக்ஸான் | H - அல் ஹஜ்ப் | |

மேலுள்ள அட்டவணையில் வாரிசுரிமைச் சட்டத்தோடு தொடர்புபட்ட பதங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடை யாது?

(1) A, B, C, D, E (2) A, B, D, E, G (3) A, C, E, G, H
(4) B, C, D, E, F (5) B, D, E, G, H

28. பின்வரும் அட்டவணையிலுள்ள பதங்களைக் கவனத்திற் கொள்க.

| | | |
|---|---|---|
| A - ஆமில் | B - கிரான் | C - அல்காரிமூன் |
| D - துல் ஹுலைபா | E - அவ்ராது | F - மீகாத் |
| G - தஹீர் | H - குர்பானி | I - உம்ரா |

மேலுள்ள அட்டவணையில் ஹஜ் கடமையோடு தொடர்புபட்ட பதங்களை உள்ளடக்கிய விடை யாது?

(1) A, B, D, F, H (2) B, C, F, H, I (3) B, D, F, H, I
(4) C, D, F, G, H (5) D, E, G, H, I

- **29** முதல் **32** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** எனும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் உள்ளவை **X** நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. எனினும் அவை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அதன்படி **X** நிரலுக்கேற்ப **Y** நிரலிலுள்ள விடயங்களைப் பொருத்தமான வகையில் தொடர்புபடுத்தும்போது ஒழுங்குமுறையில் அமையும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

29.

| X | Y |
|---|---|
| (i) அக்லாக | A - மாற்றத்திற்குள்ளான அல் குர்ஆனின் சட்டம் |
| (ii) அஸ்பாபுந் நுஸுல் | B - பிரத்தியேகமான வழக்காறுகள் |
| (iii) மன்ஸுக் | C - சமூக நலனை ஆதாரமாகக் கொள்ளல் |
| (iv) இஸ்திஸ்லாஹ் | D - அல் குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டதற்கான காரணங்கள் |
| (v) உர்ப் காஸ் | E - நற்குணங்கள் |

(1) A, B, C, D, E (2) B, C, A, D, E (3) C, A, B, D, E
(4) D, C, A, B, E (5) E, D, A, C, B

**30.**

| X | Y |
|---|---|
| (i) தவ்ஹீத் உலூஹிய்யத் | A - ஆத்திக நம்பிக்கையுடைய அதிகமானோர் ஏற்றுக்கொள்ளும் கடவுள் கொள்கை |
| (ii) அர்ருஹானிய்யாத் | B - நேரான பாதை |
| (iii) தவ்ஹீத் ருபூபிய்யத் | C - வணங்கப்படுவதற்குத் தகைமையுள்ளவன் அல்லாஹ் மட்டுமே எனும் கொள்கை |
| (iv) ஹிதாயத் | D - அழகிய திருநாமங்களும் தனித்துவமான பண்புகளும் |
| (v) அஸ்மா வஸ்ஸிபாத் | E - மலக்குகள், ஷைத்தான், ஜின் |

(1) A, B, D, E, C (2) B, A, C, E, D (3) C, E, A, B, D
(4) D, A, C, B, E (5) E, C, A, B, D

**31.**

| X | Y |
|---|---|
| (i) கிதாப் அல் உம்மு | A - தஹ்ஸீனிய்யாத்தின் மற்றொரு பெயர் |
| (ii) அல் முதவ்வனா | B - முறையற்ற தலாக் |
| (iii) தக்மீலிய்யாத் | C - சாபமிடுதல் |
| (iv) தலாக் பிதஈ | D - இமாம் ஷாபிஈ (ரஹ்) |
| (v) லிஆன் | E - இமாம் மாலிக் (ரஹ்) |

(1) A, B, C, D, E (2) B, A, C, D, E (3) C, A, B, E, D
(4) D, E, A, B, C (5) D, E, B, A, C

**32.**

| X | Y |
|---|---|
| (i) வெள்ள நீர் கட்டுப்பாட்டு வாசல் (Sluice gate) | A - அறேபியரின் நதி எனவும் அழைக்கப்பட்டது |
| (ii) தெதுரு ஓயா, சோனா நதி | B - மகாவம்சத்தை மொழிபெயர்த்தவர் |
| (iii) டபிள்யூ கைகர் | C - 4000 ஆண்டுகள் பழமையானது |
| (iv) இம்ரஉல் கைஸ் | D - அஜாஇபுல் ஹிந்த |
| (v) இப்னு ஷஹ்ரயார் | E - ஜாஹிலிய்யக் கால கவிஞர் |

(1) A, C, B, E, D (2) A, C, D, E, B (3) B, A, C, E, D
(4) C, A, B, E, D (5) D, A, E, B, C

**33.** அர்கானுல் கியாஸில் உள்ள நான்கு அடிப்படைகளாவன
(1) அஸ்ல், பரஉ, நக்லி, இஜ்திஹாத் (2) பரஉ, நக்லி, இல்லத், கியாஸ்
(3) அஸ்ல், பரஉ, இல்லத், ஹுகும் (4) இல்லத், ஹுகும், இஜ்மா, முரக்கப்
(5) நக்லி, இல்லத், ஸஃகூதி, ஸரீஹ்

**34.** வானம், பூமியைப் படைப்பதற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் அவற்றை அல்லாஹ் லவ்ஹுல் மஹ்பூழில் எழுதியுள்ளதாக அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது?
(1) 10 000 ஆண்டுகள் (2) 25 000 ஆண்டுகள் (3) 50 000 ஆண்டுகள்
(4) 60 000 ஆண்டுகள் (5) 75 000 ஆண்டுகள்

**35.** உலக வரலாற்றில் அதிக நபிமார்கள் அனுப்பப்பட்ட சமூகம்
(1) கிறிஸ்தவ சமூகம் (2) முஸ்லிம் சமூகம் (3) இந்து சமூகம்
(4) யூத சமூகம் (5) பௌத்த சமூகம்

**36.** ஹஸன் அவனுக்கு சொந்தமாக இருந்த நான்கு ஏக்கர் நிலத்தை, பயிர் செய்வதற்காக ரமீஸுக்குக் கொடுத்து, அதன் விளைச்சலில் பாதியை தனக்குத் தர வேண்டுமென கேட்டுக் கொண்டார். இவ்வகை பொருளீட்டல் முறை இஸ்லாத்தில் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) முஷாரகா (2) முழாரபா (3) முராபஹா
(4) இஜாரா (5) முஸாரஆ

37. வியாபாரத்தின்போது வாங்குவோனும் விற்போனும் இஸ்லாமிய அடிப்படைகளைப் பேணிச் செயற்படும்போது அவர்களுக்குக் கிடைக்கும் நலன்களில் **உள்ளடங்காதது**
   (1) அவர்களது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை ஒரு இபாதத்தாக மாறும்.
   (2) அவர்களுக்கிடையில் நல்லுறவு பேணப்படும்.
   (3) அவர்களில் ஒருவர் மாத்திரம் பயன்பெற முடியும்.
   (4) வர்த்தகம் ஸ்திரத்தன்மையடையும்.
   (5) ஹராமான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து மீட்சி கிடைக்கும்.

38. ஒருமுறை தலைவிரிகோலமாகவும், தாடியைச் சீரசெய்யாமலும் வந்த ஒருவர் நபி (ஸல்) அவர்களின் போதனையைக்கேட்டு அவற்றைச் சீரசெய்து வந்தபோது நபி (ஸல்) அவர்கள் அவருக்கு என்ன கூறினார்கள்?
   (1) தலையில் எண்ணெய் தடவி தலை முடியைச் சீரசெய்து கொள்வது நல்லது.
   (2) நானும் இவ்வாறு தலை முடியைச் சீரசெய்திருப்பதை நீர் கவனிக்கவில்லையா?
   (3) தொடர்ச்சியாக இவ்வாறு செய்து கொள்வது மிகவும் நல்லது.
   (4) உனது குடும்பத்தினரையும் இவ்வாறு தலை முடியைச் சீரசெய்ய பயிற்றுவிப்பீராக.
   (5) ஷைத்தானைப்போல தலைவிரி கோலமாக வருவதை விட இப்படி இருப்பது நல்லது.

39. ஆடை, அணிகலன்கள் பற்றிய ஆண்களுக்கான சட்டவிதிகளில் **பிழையான** கூற்று யாது?
   (1) பட்டாடை, தங்கம் என்பன ஆண்களுக்கு ஹராமாக்கப்பட்டுள்ளது.
   (2) ஆண்கள் வெள்ளியிலான ஒரு மோதிரத்தைத் தவிர வேறு எந்த அணிகலன்களையும் அணியாதிருத்தல் வேண்டும்.
   (3) அவ்ரத்தை மறைக்கக் கூடியதாய் ஆடையை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.
   (4) புதிய அழகான ஆடைகள் அணிவதை வழமையாக்கிக் கொள்ளல் வேண்டும்.
   (5) பெண்களுக்குரிய பிரத்தியேகமான ஆடை அணிகலன்களை ஆண்கள் அணியாதிருத்தல் வேண்டும்.

40. பின்வருவனவற்றில் இஸ்லாத்தில் இத்தா விதியாக்கப்பட்டதன் நோக்கங்களில் **உட்படாதது** எது?
   (1) இத்தா என்பது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டுள்ள இபாதத்
   (2) இறந்த அல்லது விவாகரத்துச் செய்த கணவன் மூலம் குறித்த பெண் கருவுற்றிருக்கிறாளா என்பதை அறிந்து கொள்வதற்குரிய கால எல்லை
   (3) கணவனை இழந்த பெண் துக்கம் அனுஷ்டிப்பதற்குரிய கால எல்லை
   (4) தொழில் செய்வதற்காக வெளிக்கிட்டு செல்வதை எதிர்பார்த்திருக்கும் கால எல்லை
   (5) ஒரு குழந்தையின் பல்துறை சார்ந்த உரிமைகளைத் தீர்மானித்துக் கொள்வதற்கான கால எல்லை

41. மஸ்ஜிதுகளை அடிப்படையாகக் கொண்டு பிரபல்யம் வாய்ந்த நூல் நிலையங்கள் உருவான முஸ்லிம் நாடுகள், நகரங்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
   (1) மதீனா, எகிப்து, ரோம், டமஸ்கஸ், கைரவான்
   (2) டமஸ்கஸ், டியூனிஸியா, மதீனா, லண்டன், எகிப்து
   (3) எகிப்து, டமஸ்கஸ், டியூனிஸியா, கைரவான், ஜெரூசலம்
   (4) மதீனா, டியூனிஸியா, டமஸ்கஸ், பாரிஸ், கைரவான்
   (5) மதீனா, எகிப்து, டமஸ்கஸ், கைரவான், டியூனிஸியா

*More Papers & Online Exams*
www.Edukinniya.lk

42. மனித உரிமைகளை அறிமுகப்படுத்திய மதீனா சாசனமும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பிரகடனமும் வெளியிடப்பட்ட ஆண்டுகள் முறையே
   (1) கி. பி. 610, 1940 ஆகும்.
   (2) கி. பி. 612, 1948 ஆகும்.
   (3) கி. பி. 622, 1948 ஆகும்.
   (4) கி. பி. 625, 1950 ஆகும்.
   (5) கி. பி. 630, 1955 ஆகும்.

43. இஸ்லாத்தில் தண்டனைகள் வரையறுக்கப்பட்ட குற்றங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   (1) ஜராஇமுல் கிஸாஸ் வத்தியத்
   (2) ஜராஇமுல் ஹுதூத்
   (3) அத் தஃஸீர
   (4) ஸப்உல் மூபிகாத்
   (5) அல் - ஜினாயாத்

44. பிலால் (ரழி) அவர்களைப் பார்த்து "கறுப்பியின் மகனே" என்று சொன்னபோது, "உம்மிடம் ஜாஹிலிய்யத் உணர்வு இன்னும் நீங்கவில்லை" என நபி (ஸல்) அவர்கள் கடிந்து கொண்ட நபித்தோழர் யார்?
   (1) முஆத் இப்னு ஜபல் (ரழி)
   (2) அபூதர் (ரழி)
   (3) ஜஃபர் (ரழி)
   (4) அர்கம் (ரழி)
   (5) ருபை இப்னு ஆமிர் (ரழி)

45. உமர் (ரழி) ஆட்சிக் காலத்தில் கிளர்ச்சிகளும், உள்நாட்டுக் குழப்பங்களும் உருவாகக் காரணமாக இருந்த பேரரசுகள்

(1) துருக்கிய, பாரசீகப் பேரரசுகள்
(2) பாரசீக, பைசாந்திரியப் பேரரசுகள்
(3) பாரசீக, பிரித்தானியப் பேரரசுகள்
(4) ரோம், மங்கோலியப் பேரரசுகள்
(5) பாரசீக, கிரேக்கப் பேரரசுகள்

- **46** தொடக்கம் **50** வரையிலான வினாக்களில் இரண்டு வகையிலான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுகளுக்குப் பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| இல. | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 46. | ஜாஹிலிய்யக் காலத்தில் அறபு நாடு பாலைவனமாக இருந்ததோடு அங்கு நிலையான ஆட்சி மற்றும் நிருவாக ஒழுங்குகள் இடம்பெற்று வந்தன. | நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து மதீனாவில் ஒரு சிறந்த சமூகம் கட்டியெழுப்பப்பட்டதோடு, அங்கு நிலையான ஓர் அரசும் ஏற்படுத்தப்பட்டது. |
| 47. | ஒருவர் ஏற்றிருக்கும் மதத்தை அல்லது கொள்கையை பிறர் மீது திணிக்கும் உரிமை எவருக்குமில்லை என இஸ்லாம் கருதுகிறது. | ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பும் கொள்கையை அல்லது மதத்தைப் பின்பற்றுவதற்கு இஸ்லாம் உரிமை வழங்கவில்லை. |
| 48. | ஜாஹிலிய்யக் காலத்தில் ஆண்கள் உயர்வாகக் கணிக்கப்பட்டதோடு, ஆண் குழந்தை பிறந்தால் மகிழ்ந்து விழா எடுக்கும் பழக்கமும் இருந்து வந்தது. | இஸ்லாத்தின் வருகையைத் தொடர்ந்து பெண்களுக்கு மறுக்கப்பட்டிருந்த மணவுரிமை, விவாகரத்துரிமை, சொத்துரிமை, நீதி கோரும் உரிமை போன்றன அவர்களின் இயல்புக்கேற்ப வழங்கி வைக்கப்பட்டது. |
| 49. | ஜாஹிலிய்யக் கால அறேபியாவில் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றிய சிலரும் வாழ்ந்து வந்தனர். | ஹுனபா எனப்பட்டோர் ஜாஹிலிய்யக் காலத்தில் பலியிடப்பட்ட பிராணிகளின் மாமிசத்தை உண்ணல், பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தல் போன்றவற்றிலிருந்து விலகியிருந்தனர். |
| 50. | மனிதனை வகைபிரித்து தராதரப்படுத்துவதற்கான அளவுகோல்களாக நிறம், குலம், சாதி என்பவற்றை இஸ்லாம் பயன்படுத்துகின்றது. | நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பணியில் ஈடுபடும் ஒருவர் அதன் தத்துவம், முறைமை, ஒழுங்கு என்பவற்றை அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. |

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2023(2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **44**

විෂයය / பாடம்: **இஸ்லாம்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 5 | 21. | 4 | 31. | 4 | 41. | 5 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 3 | 32. | 4 | 42. | 3 |
| 03. | 1 | 13. | 2 | 23. | 3 | 33. | 3 | 43. | 2 |
| 04. | 5 | 14. | 1 | 24. | 3 | 34. | 3 | 44. | 2 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 2 | 35. | 4 | 45. | 2 |
| 06. | 1 | 16. | 1 | 26. | 3 | 36. | 5 | 46. | 2 |
| 07. | 3/5 | 17. | 2 | 27. | 3 | 37. | 3 | 47. | 3 |
| 08. | 5 | 18. | 1 | 28. | 3 | 38. | 5 | 48. | 1 |
| 09. | 1 | 19. | 2 | 29. | 5 | 39. | 4 | 49. | 5 |
| 10. | 4 | 20. | 3 | 30. | 3 | 40. | 4 | 50. | 4 |

○ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) ஆதம் (அலை) அவர்களுக்கு ஸுஜூது செய்யுமாறு அல்லாஹுதஆலா யாரிடம் கூறினார்? (02 புள்ளிகள்)
   (ii) அல்லாஹ்வின் இருப்பை உறுதிப்படுத்தக்கூடிய பகுத்தறிவுரீதியான இரண்டு கருத்துக்களைத் தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)
   (iii) 'கழா கத்ர்' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, இதனை விளக்கும் அல் குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரம் ஒவ்வொன்று தருக. (06 புள்ளிகள்)
   (iv) இபாதத், முஆமலாத் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

2. (i) நபி (ஸல்) அவர்களது காலத்தில், முஸ்லிம்கள் ஹிஜ்ரத் மேற்கொண்ட பிரதேசங்கள் இரண்டைத் தருக. (02 புள்ளிகள்)
   (ii) நஸ்கின் வகைகள் நான்கையும் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)
   (iii) ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாற்றில் நபி (ஸல்) அவர்களது காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் மூன்றைக் குறிப்பிட்டு, விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) தபஉத்தாபிஈன்கள் காலத்தில் ஸுன்னாவின் தூய்மையைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டை விளக்குக. (08 புள்ளிகள்)

3. (i) எந்த எதிர்பார்ப்புமின்றி ஒரு சகோதரனுக்குக் கடன் கொடுத்து உதவி செய்வதை இஸ்லாம் எவ்வாறு அழைக்கின்றது? (02 புள்ளிகள்)
   (ii) பைத்துல்மால் நிதியத்தோடு உமர் (ரழி) அவர்களுக்கிருந்த தொடர்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)
   (iii) சமகாலப் பொருளாதாரப் பிரச்சினைகள் மூன்றை அடையாளப்படுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்கு இஸ்லாம் பரிந்துரைத்துள்ள வழிகாட்டல்களைத் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)
   (iv) காப்புறுதி (அத்தஃமீன்) அமைப்புக்களைச் செயற்படுத்துதல் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

More Papers & Online Exams
www.Edukinniya.lk

## பகுதி II

4\. (i) இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் நான்கினை அல் குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) மகாஸிதுஷ் ஷரீஆவின் மூன்று படிநிலைகளையும் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை விளக்குக. (10 புள்ளிகள்)

5\. (i) இஸ்லாத்தில் திருமணத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு, திருமணத்தின்போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களை அடையாளப்படுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) சொத்துப் பங்கீட்டு விடயத்தில் இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் நடைமுறைகளைக் குறிப்பிட்டு, வாரிசுரிமைக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

6\. (i) இஸ்லாம் போதிக்கும் சமய, சமூக நல்லிணக்கத்தின் அடிப்படைகளில் ஐந்தைக் குறிப்பிட்டு, அவற்றைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய மதீனா அரசில் மேற்கொள்ளப்பட்ட சமய, சமூக நல்லிணக்கத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

7\. (i) இலங்கை முஸ்லிம்களின் அரசியல், சமூக, கலாசார முன்னேற்றத்தில் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சாதக நிலைமைகளைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) சுதந்திரத்துக்கு முற்பட்ட இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பணிகளை விரிவாக ஆராய்க. (10 புள்ளிகள்)

8\. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) கத்முன் நுபுவ்வத் (05 புள்ளிகள்)

(ii) பைத்துல் முகத்தஸ் (05 புள்ளிகள்)

(iii) இஸ்லாம் முன்வைக்கும் சமூக நீதி (05 புள்ளிகள்)

(iv) வஹப் இப்னு அபீ ஹப்ஸா (05 புள்ளிகள்)

* * *

பகுதி (I)

1. (i) ஆதம் (அலை) அவர்களுக்கு ஸுஜூது செய்யுமாறு அல்லாஹுதஆலா யாரிடம் கூறினார்?

**மலக்குகள், இப்லீஸ்**

**(மலக்குகள் என்பதற்கு 2 புள்ளிகளும் இப்லீஸ் என மாத்திரம் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 புள்ளியும் வழங்க வேண்டும்)**

(ii) அல்லாஹ்வின் இருப்பை உறுதிப்படுத்தக்கூடிய பகுத்தறிவுரீதியான இரண்டு கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.

- **இப்பாரிய பிரபஞ்சத்தில் காணப்படும் சிறிய பெரிய படைப்புக்கள் அனைத்தும் தானாக உருவானது எனக் கூறுவது பகுத்தறிவுக்கு முரணானதாகும்.**
- **வெப்பவியக்கவியல் தொடர்பாக நிரூபிக்கப்பட்ட விதியின்படி பிரபஞ்சமானது தானாக உருவாகிய ஒன்றாக இருக்க முடியாது. அதன் உருவாக்கத்துக்கு அறிவும் பேராற்றலும் மிக்க ஒரு சக்தியே காரணமாகும்.**
- **பிரபஞ்சத்தில் அணுமுதல் அண்டம் வரை உள்ள அனைத்திலும் அவற்றின் இயக்கச் செயற்பாடுகளிலும் காணப்படும் நுட்பங்களும் மனித ஆற்றலை மிஞ்சிய அவற்றின் எண்ணிக்கையும் விசாலமும், பிரபஞ்சம் தானாக உருவாகியது என்பதை மறுப்பதற்குப் போதுமான பகுத்தறிவு ரீதியான சான்றுகளைத் தருகின்றன.**
- **“ஒன்றை இல்லை என்று மறுப்பதற்குக் கட்புலனாகாமை மாத்திரம் போதுமானதல்ல” என்பன பகுத்தறிவின் முடிவுகளாகும்.**
- **“எந்த ஒரு படைப்பும் படைப்பாளனின்றி உருவாவதில்லை” பிரபஞ்சம் தானாகத் தோன்றியது எனக்கூறுவது, “மரம் தானாக விழுந்து பலகைகளாகக் கிளிந்து வள்ளமாக மாறியதைப் போன்றதாகும்”**
- **புகை கிழம்பினால் அதற்குப்பின் நெருப்பு இருப்பதைக் காட்டுவது போல படைப்பினங்களின் தோற்றத்திற்கு பின்னணியில் படைப்பாளன் இருப்பதை உணர்த்தும்.**

**(இவை போன்ற இரண்டு கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் $2 \times 2 = 4$ புள்ளிகள்)**

(iii) 'கழா கத்ர்' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, இதனை விளக்கும் அல் குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரம் ஒவ்வொன்று தருக.

- **கழா: மொழியில் – படைத்தல், தீர்ப்பளித்தல், நிறைவேற்றுதல்**
- **கத்ர்: மொழியில் – நிர்ணயித்தல், முன்னேற்பாடு, மட்டிடுதல், ஒரு விடயத்தின் முடிவு**
- **கழா கத்ர்:**
- **பொதுவாக “கழா கத்ர்” என்ற இரு பதங்களையும் “இறைவனால் விதிக்கப்பட்ட விதி” என்று கூற முடியும்.**
- **இஸ்லாமிய வழக்கில்: ஒவ்வொரு நிகழ்வுக்குமான அல்லாஹ்வின் முன்னளப்பும் அவனிடம் குறிப்பிடப்பட்ட காலத்தில் குறிப்பிட்ட விதமாக அது நிகழ்வது பற்றிய அவனது அறிவும் அவனது எழுத்தும் நாட்டமும் அவன் முன்னளந்ததற்கேற்ப நிகழ்வதுமாகும்.**

**அல்-குர்ஆன் ஆதாரம்**

- **“நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும், (நிர்ணயிக்கப்பட்ட) அளவின்படியே படைத்திருக்கின்றோம்” (54:49)**

- "இன்றும் அல்லாஹ்வுடைய கட்டளை நிறைவேற்றப்பட்ட முடிவாக இருக்கின்றது" (17:108)
- "அவன் எத்தகையவனென்றால், உங்களை களிமண்ணால் படைத்தான். பின்னர் உங்களுக்கு ஒரு தவணையையும் நிர்ணயம் செய்தான்" (06:02)
- "ஒவ்வொரு சமுதாயத்தாருக்கும் ஒரு தவணையுண்டு. அவர்களது தவணை வந்துவிட்டால் ஒரு கணப் பொழுது பிந்தமாட்டார்கள், முந்தமாட்டார்கள்" (07:34)
- "அல்லாஹ் ஒரு தீமையை உம்மைத் தீண்டும்படி செய்தால் அதை அவனைத் தவிர (வேறு எவரும்) நீக்க முடியாது அவன் உமக்கு ஒரு நன்மை செய்ய நாடிவிட்டால் அவனது அருளைத் தடுப்பவர் எவருமில்லை" (10:107)

More Papers & Online Exams
www.Edukinniya.lk

**ஹதீஸ் ஆதாரம்**

- அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி) அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கும் 'ஹதீஸ் ஜிப்ரீல்' எனும் பிரபலமிக்க ஹதீஸில் ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களிடம், "ஈமான் பற்றி எனக்கு அறிவியுங்கள்?" என்று கேட்டபோது பதிலளித்த நபியவர்கள், "அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும் அவனது வேதத்தையும் அவனது றஸூல்மார்களையும் மறுமை நாளையும் நீர் நம்புவதும் நல்லதும் கெட்டதும் கத்ரின் படியே என்றும் நம்புவதுமாகும் என்று கூறினார்கள்". (முஸ்லிம்)
- "சில மனிதர்கள் கத்ரை விசுவாசிப்பதில்லை என்ற செய்தி அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி) அவர்களை எட்டியபோது கூறினார்கள். நான் அவர்களைச் சந்தித்தால் அவர்களிடம் கூறுவேன்: நான் உங்களை விட்டும் நிரபராதியாகி விட்டேன். நீங்களும் என்னை விட்டு நிரபராதியாகி விட்டீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக உஹுத் மலையளவு தங்கத்தைத் தர்மம் செய்தாலும் அவர்கள் கத்ரை நம்பும் வரை அவர்களது தர்மம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை". (முஸ்லிம்).
- "வானம் பூமி படைக்கப்படுவதற்கு ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்னரே படைப்புக்களின் அளவீட்டை அல்லாஹ் எழுதி வைத்துள்ளான்" (முஸ்லிம்)

**(வரைவிலக்கணத்துக்கு 2 புள்ளிகளும் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆதாரங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா 2 புள்ளிகளுமாக, மொத்தம் 6 புள்ளிகள்)**

(iv) இபாதத், முஆமலாத் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துக.

- இபாதத்தின் என்பது வணக்கத்தையும் முஆமலாத் என்பது மனிதஉகளது அன்றாடச் செயற்பாடுகளையும் குறிக்கும்.
- தொழுகை, நோன்பு, ஹஜ், குர்ஆன் திலாவத், பிரார்த்தனை, உம்றா, திக்ர், தவ்பா, போன்ற புனிதத்துவம் கொண்ட அனைத்து வணக்கவழிபாடுகளும் இபாதாத் எனப்படுகின்றன. இவை தவிர்ந்த மனிதனின் அடிப்படைத் தேவைகள் முதல் வியாபாரம், திருமணம், ஏனைய கொடுக்கல் வாங்கல்கள், ஜீவகாருண்யம், சுற்றாடலைப் பேணல், நீதி நிர்வாகம் போன்ற அனைத்தும் முஆமலாத் வகையைச் சேர்ந்த அமல்களாகும்.
- இபாதத்தின் வெளிப்படையான நோக்கம் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுவதும் அவனது திருப்தியைப் பெறுவதுமேயாகும். முஆமலாத் செய்யப்படுவதற்கான அடிப்படை நோக்கம் மனிதர்களினதும் மற்றவைகளினதும் தேவைகளை நிறைவேற்றி வைப்பதாகும்.
- இபாதத்களில் அல்லாஹ்வின் கட்டளையும் நபி (ஸல்)அவஉகளது செய்முறையும் பேணப்படுவது அவசியமாகும். ஆனால் முஆமலாத்களில் மனித நலனும் இஸ்லாத்தின் அடிப்படைகளை மீறாதிருத்தல் அவசியமாகும்.
- இபாதத் காலமாற்றத்துக்கு ஏற்ப மாற்றமடையாது. ஆனால், முஆமலாத்தில் மாற்றங்கள் நிகழ முடியும்.
- இபாதத் அல்லாஹ்வுடன் உறவை பலப்படுத்தும் அதேவேளை, முஆமலாத் மனிதர்களுடனான

உறவை பலப்படுத்தும்.

- மு஛ஆமலாத்தை இபாதத்தாக மாற்றிக்கொள்ள இஸ்லாம் சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

(இவை போன்ற 4 கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 4 x 2 = 8 புள்ளிகள்)

(2 + 4 + 6 + 8 = 20)

2. (i) நபி (ஸல்) அவர்களது காலத்தில், முஸ்லிம்கள் ஹிஜ்ரத் மேற்கொண்ட பிரதேசங்கள் இரண்டைத் தருக.

1. ஹபஷா (அபீஸீனியா)
2. மதீனா (யத்ரிப்)

(2 புள்ளிகள்)

(ii) நஸ்கின் வகைகள் நான்கையும் சுருக்கமாக விளக்குக.

நஸ்கின் வகைகள்

1. அல்குர்ஆன் வசனம் ஒன்று இன்னொரு அல்குர்ஆன் வசனத்தால் மாற்றப்படுதல்.
உதாரணம்: ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால் அவளது இத்தாக்காலம் ஒரு வருடம் என அல்குர்ஆன் (2:240) குறிப்பிடுகிறது. பின்னர் அச்சட்டம் 4 மாதங்களும் 10 நாட்களும் (2:234) என்ற வசனத்தால் மாற்றப்பட்டது.

2. அல்குர்ஆனின் சட்டம் ஒன்று அஸ்ஸுன்னாவினால் மாற்றப்படுதல்.
- இமாம்களான அபூஹனீபா (றஹ்), மாலிக் (றஹ்), அஹ்மத் (றஹ்) ஆகியோர் இது சாத்தியமானது எனக் கருதுகின்றனர்.
  உதாரணம்:
  "உங்களில் எவருக்கு மரணம் நெருங்கி விடுகிறதோ அவர் ஏதேனும் பொருள் விட்டுச் செல்பவராக இருப்பின், அவர் (தம்) பெற்றோருக்கும், பந்துக்களுக்கும் முறைப்படி வஸிய்யத்து (மரண சாஸனம்)செய்வது விதியாக்கப்பட்டிருக்கிறது" (2:180) என்ற வசனம்
  "வாரிசுகளுக்கு வஸிய்யத் இல்லை" (அபூதாவுத்) என்ற ஹதீஸ் மேலுள்ள வசனத்தின் மூலம் மாற்றப்பட்டது.
- இமாம் ஷாபி (றஹ்) அவர்களும் லாஹிரி மத்ஹபைச் சேர்ந்தோரும் சாத்தியமற்றது எனக் கருதுகின்றனர்.

3. ஸுன்னாவின் சட்டம் ஒன்றை அல்குர்ஆன் மாற்றுதல்
உதாரணம்: ஆரம்ப நாட்களில் மஸ்ஜிதுல் அக்ஸாவில் செயற்படுத்தப்பட்ட கிப்லா பின்னர் மஸ்ஜிதுல் ஹராமிற்கு மாற்றப்பட்டது.

4. ஸுனாவின் சட்டம் ஒன்று ஸுன்னாவினால் மாற்றப்படுதல்,
உதாரணம்: "நான் ஆரம்பத்தில் புதைகுழிகளைத் தரிசிப்பதை உங்களுக்குத் தடை செய்திருந்தேன். இப்போது நீங்கள் அதனைத் தரிசிக்கலாம்"

(நான்கு வகைகளும் உதாரணங்களுடன் எழுதப்பட்டிருப்பின் 1 x 4 + 4 புள்ளிகள்)

(iii) ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாற்றில் நபி (ஸல்) அவர்களது காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு, விளக்குக.

- நபி(ஸல்) அவர்களது காலப்பகுதி எனப்படுவது, நபித்துவத்திலிருந்து அவரது வபாத் வரையுள்ள காலப்பகுதியாகும்.
- இக்காலத்தில் ஹதீஸ்கள் பாதுகாப்பட்ட மிக முக்கியமான நான்கு வழிமுறைகள் நபித்தோழர்களினால் பின்பற்றப்பட்டமை

1. மனனம் மூலம் பாதுகாத்தல் :

- திண்ணைத் தோழர்கள், உம்மஹாதுல் முஃமினீன்கள், நபிகளாரின் பணியாட்கள், தனிப்பட்ட அடிப்படையில் தோழர்கள் போன்றோர் மனனத்தின் மூலம் ஹதீஸ்களைப் பாதுகாத்து வழங்கியமை. உதாரணம்: உம்மஹாதுல் முஃமினீன்கள், பெண்கள் சம்பந்தமான போதனைகளை மனனத்தில் பாதுகாத்து வழங்கியதைக் குறிப்பிடலாம்.
- ஜாஹிலிய்யா காலத்தில் அதிக மனன சக்கி கொண்டோர் காணப்பட்டமை.
- நபியின் தூண்டுதல் "40 ஹதீஸ்களை மனனஞ் செய்பவன் நாளை மறுமையில் ஞானிகளுடன் எழுப்பப்படுவான்."

2. எழுதிப்பாதுகாத்தல்

- ஜாஹிலிய்யாக் காலத்தில் எழுதும் வழக்கம் உடையவர்கள் இருந்துள்ளமை: கஃபதுல்லாவில் தொங்கவிடப்பட்ட கவிதைத் தொகுப்புக்கள், உடன்படிக்கைகள், கடிதங்கள் இதற்கு சான்றாகும்.
- நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் ஹதீஸ்களை எழுதிப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை நபித்தோழர்கள் மேற்கொண்டமை.
- உதாரணம்:
  1. அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்களால் அறிவிக்கப்படும் ஹதீஸ் 2. அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) அவர்களால் அறிவிக்கப்படும் ஹதீஸ்
- இவ்வாறு நபித் தோழர்களுள் நாற்பதுக்கு அதிகமானவர்கள் ஹதீஸ்களை எழுதிப்பாதுகாத்ததாக வரலாற்றாதாரங்கள் கூறுகின்றமை.

3. வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திப் பாதுகாத்தல்.

- ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களை அணு அணுவாகப் பின்பற்றினார்கள்.
- உதாரணம்:
  1. 'நபியவர்கள் தொழுகையின் போது பாதணிகளை களற்றியவேளை தோழர்களும் களற்றிய ஹதீஸ்...
  2. இப்னு உமர் (ரழி) பிரயாணத்தின்போது மரக்கிளைக்கு நபியவர்கள் குனிந்து சென்றதாகக் கூறி குனிந்து சென்ற நிகழ்வு...

4. எத்திவைத்தல் (கற்றுக்கொடுத்தல்)

- நபியவர்களது தூண்டுதல், "ஒரு வசனத்தையேனும் என்னிடமிருந்து எத்திவையுங்கள்"
- எனவே, நபியவர்களிடமிருந்து தமக்கு கிடைத்த ஹதீஸ்களை உடன் தமது மனைவி, பிள்ளைகள், எனைய நபித்தோழர்களுக்கு எத்திவைத்தமை.

**(மூன்று விடயங்கள் எழுதப்பட்டு விளக்கப்பட்டிருப்பின் 3 x 2 = 6 புள்ளிகள்)**

(iv) தபஉத் தாபிஈன்கள் காலத்தில் ஸுன்னாவின் தூய்மையைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டை விளக்குக.

1. அஸ்மாஉர் ரிஜால்

- ஒரு ஹதீஸின் இஸ்னாத் பற்றி ஆராய்கின்ற கலையே அஸ்மாஉர்ரிஜால்" (மனிதர்களது பெயர்கள்) எனப்படும்.
- "நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து ஹதீஸ்கள் அனைத்தும் வெளியாகியது முதல் அவை பெறப்பட்டு அறிவிக்கப்பட்டு, ஒன்றுதிரட்டப்பட்டு தொகுப்பாசிரியரினால் தொகுத்தெழுதப்படும் வரை யார் யாரெல்லாம் அதில் சம்பந்தப்பட்டார்களோ அவர்கள் அனைவரது வரலாறுகளையும் குறிக்கின்ற ஒரு கலை.
- அஸ்மாஉர் ரிஜால் மூலம் ஹதீஸ்களை அறிவித்தவர்களது முழுமையான தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதனால் ஒரு ஹதீஸ் தொடர்பாக இறுதியானதொரு தீர்மானத்திற்கு வர அது உதவுகிறது.
- ஒரு ஸனதில் குறிப்பிடப்பட்டு இருக்கின்ற ஓர் அறிவிப்பாளர் அஸ்மாஉர் ரிஜாலில் அடங்காதவராக இருந்தால் 'இஸ்னாதில் ஒரு முறிவு ஏற்பட்டு இருக்கின்றது' என்ற தீர்மானத்திற்கு வந்து குறித்த ஹதீஸ் நிராகரிக்கப்பட வேண்டிய ஹதீஸின் பட்டியலில் சேர்த்துவிட முடிகின்றது.
- ஸனதில் அடங்குகின்ற இரு அறிவிப்பாளர்களுக்கிடையில் ஏற்படுகின்ற வரலாற்று ரீதியிலான முரண்பாட்டை இக்கலை வெளிப்படுத்தக்கூடியதாக இருப்பதால் ஹதீஸின் இறுதியான நிலை பற்றித் தீர்மானிக்க அஸ்மாஉர் ரிஜால் உதவுகின்றது.
- இவ்வாறு அறிவிப்பாளர் வரிசையில் ஏற்படுகின்ற குறைகளையும் முரண்பாடுகளையும் அஸ்மாஉர் ரிஜால் இனங்காட்டி ஒரு ஹதீஸின் நம்பகத்தன்மையையும் தூய்மையையும் உறுதிசெய்து கொள்ள உதவுகின்றது.

2. இல்முல் ஜரஹ் வத்தஃதீல்

- ஒரு ஹதீஸின் மதன் பற்றியும், ஸனத் பற்றியும் ஆராய்கின்ற கலைகளுள் இல்முல் ஜரஹ் வத்தஃதீலும் ஒன்றாகும்.
- இத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஹதீஸ்கலை வல்லுணர்கள் பின்வரும் அடிப்படைகளில் அமையுமானால் அவ்வாறான ஹதீஸ்களை நிராகரிக்கக்கூடிய ஹதீஸின் வகைகளில் சேர்த்துக்கொள்ள முடியுமெனக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

01. அரபிகளது, அதிலும் விசேடமாக, குறைஷிகளது மொழி வழக்கிற்கு மாற்றமாக அல்லது தாழ்ந்த அரபு மொழிநடையில் வருபவை.

02. நபி (ஸல்) அவர்களது மொழிப் பிரயோகத்திற்கு அல்லது மொழிப் போக்கிற்கு மாற்றமாக வருபவை.

03. அறிவியல், ஒழுக்கவியல் கோட்பாடுகளுக்கும் புலன் உணர்வுகளுக்கும் முரணாகவும், இச்சையின்பால் தூண்டும் விதத்திலும், மருத்துவ, வரலாற்று உண்மைகளுக்கு முரணாகவும் வருபவை.

04. அல்குர்ஆனின் தெளிவான கருத்துக்களுக்கு எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதவாறு முரணாக வருபவை.

05. நபி (ஸல்) அவர்களது காலத்தில் நடந்த வரலாற்றுச் சம்பவங்களுக்கு முரணாக வருபவை.

www.Edukinniya.lk

06.ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்களின் கொள்கைக்குச் சார்பானதாக இருத்தல்.

உதாரணம்: ஷியாக்களில் ராபிழிகள் கூறிய அஹ்லுல் பைத்துக்களைப் பற்றியவை.

07.ஒரு சிறிய செயலுக்குப் பெரிய நன்மையையும், ஓர் அற்ப விடயத்திற்குக் கடுமையான தண்டனையையும் வழங்குவதாக மிகைப்படுத்திக் கூறப்பட்டவை.

08.எல்லோருக்கும் பொதுவான ஒரு விடயம் ஒருவரினால் மாத்திரம் அறிவிக்கப்பட்டு இருப்பவை.

3. உஸூலுல் ஹதீஸ்

- ஹதீஸின் அடிப்படை பற்றி ஆராய்கின்ற கலை.
- இக்கலையில் ராவி - அறிவிப்பாளர், முஹத்திஸ் - ஹதீஸ் கலை அறிஞர், தாலிபுல் ஹதீஸ் - ஹதீஸை கற்போர்கள் போன்றோரது தகைமைகள் அடிப்படைகள் பற்றி எடுத்துக் கூறப்படுகின்றது.
- உஸூலுல் ஹதீஸ் கூறுகின்ற நிபந்தனைகளுக்கு, வரையறைகளுக்கு முரணாகின்ற வகையில் உள்ள எந்த ஹதீஸும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகைகளினுள் அடங்கமாட்டாது.
- இக்கலை அறிவிப்பாளர்களையும், முஹத்திஸீன்களையும் ஹதீஸைக் கற்கின்ற மாணவர்களையும் சரியான முறையில் இனங்காட்டி தூய்மையான ஹதீஸ்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை முஸ்லிம் உம்மத்தினருக்கு தருகின்றது.
- திறனாய்வுக் கலைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக ஹதீஸ்கள் வகைப்படுத்தப்பட்டமை.

**(இவற்றுள் இரண்டு விடயங்கள் குறிப்பிடப்பட்டு விளக்கப்பட்டிருப்பின் 2 x 4 = 8 புள்ளிகள்)**

3. (i) எந்த எதிர்பார்ப்புமின்றி ஒரு சகோதரனுக்குக் கடன் கொடுத்து உதவி செய்வதை இஸ்லாம் எவ்வாறு அழைக்கின்றது?

(i) கர்முன் ஹஸன் (அழகிய கடன்)

**(02 புள்ளிகள்)**

(ii) பைத்துல்மால் நிதியத்தோடு உமர் (ரழி) அவர்களுக்கிருந்த தொடர்புகளை விளக்குக.

அறிமுகம் : பைத்துல்மால் என்பது இஸ்லாமிய நாட்டில் காணப்படும் அரச திறைசேரியாகும். இஸ்லாமிய அரசின் நிழலில் வாழும் பிரசைகளின் அத்தியவாசிய தேவைகளை உறுதிப்படுத்துவதற்கான பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக அரசினால் திரட்டப்படும் பணத்தைப் பராமரிப்பதற்கான ஒரு வழிமுறையாக பைத்துல்மால் காணப்படுகிறது.

- இவ்வழிமுறை நபி(ஸல்) அவர்களது காலம் முதல் அரச நிதி நிறுவனமாகவும் பொதுத் திறை சேரியாகவும் நடை முறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனினும் கூபைத்துல்மால்; என்ற பெயர் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடைய காலத்திலிருந்தே இஸ்லாமிய வழக்கத்தில் இடம்பெறுகிறது.
- ஆரம்ப காலத்தில் பைதுல்மால் பள்ளிவாசலை ஒட்டிய பொது இடத்தில் அனைவருடைய கண்காணிப்பிலும் இருக்கும் வகையில் வைக்கப்பட்டிருந்தது. பின் உமர் (ரழி) காலத்தில் பாதுகாப்பான தனிக் கட்டிடங்கள் உருவாக்கப்பட்டன.
- உமர்(ரழி) அவர்கள் காலத்தில் சிரியா, எகிப்து, ஆர்மீனியா, ஆஸர்பைஜான் போன்ற பகுதிகளிலிருந்து குவியல் குவியலாகப் பொருட்கள் அரசாங்க கஜானாவிற்கு வந்த பொழுது அழுதபடியே அவற்றைப்

பெற்றுக் கொண்ட உமர்(ரழி) அவர்கள் அவற்றை பைதுல் மாலில் சேர்த்து ஒரு வருடத்தில் திரளும் தொகை அனைத்தையும் அந்த வருடத்திற்குள்ளாகவே செலவு செய்திட உத்தரவிடுவார்கள்.

- உமர் பின் கத்தாப் (ரழி) இதற்கென அவர்கள் அம்மார் பின் யாசிர் (ரழி) அவர்களை கூபாவின் ஆளுனராக நியமித்த போது பைதுல்மால் விடயத்தில் அவருக்கு ஆலோசகராகவும், அமைச்சராகவும் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களை நியமித்தார்கள்.

**(இவை போன்ற நான்கு கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் $1 \times 4 = 4$ புள்ளிகள்)**

(iii) சமகாலப் பொருளாதாரப் பிரச்சினைகள் மூன்றை அடையாளப்படுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்கு இஸ்லாம் பரிந்துரைத்துள்ள வழிகாட்டல்களைத் தெளிவுபடுத்துக.

**1. வட்டி**

வட்டியை ஹராமாக்கியுள்ள இஸ்லாம் அதற்குப் பிரதியீடாக பல்வேறு அம்சங்களை அறிமுகப் படுத்தியது. அவற்றுள் வியாபாரம், ஸகாத், கர்ளுல் ஹஸன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**தீர்ப்பதற்கான இஸ்லாமிய வழிமுறைகள்:**

**வியாபாரம் :**

- கூஅல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கியுள்ளான் வட்டியை ஹராமாக்கியுள்ளான்;

**ஸதகா:**

- "அல்லாஹ் வட்டியை அழிக்கிறான். தான தர்மங்களை வளர்க்கிறான்.; (2:276)

**கர்ளுல் ஹஸன்**

- இஸ்லாம் கூறும் ஸதகா சார்ந்த மற்றுமோர் அம்சம்தான் கர்ளுள் ஹஸன் எனும் வட்டியில்லா அழகிய கடனாகும்.

  "அல்லாஹ்வுக்கு நீங்கள் அழகியமுறையில் கடன்கொடுப்பீர்களாயின் அதை அவன் உங்களுக்கு பன்மடங்காக்கிக்கொண்டே செல்வான்"

  "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு இருதடவைகள் கடன்வழங்கினால் அதில் ஒரு தடவை அவர் ஸதகா செய்தவரைப் போன்றவராவார்." (இப்னு மாஜா)

**2. வறுமை**

- இஸ்லாம் வறுமையை வெறுக்கிறது. வறுமையின் தீய பாதிப்புக்களை விட்டும் பாதுகாப்புடன் வாழ வேண்டும் என்று சொல்கிறது.
- நபி (ஸல்) அவர்கள் வறுமை நிலையை வெறுத்திருக்கிறார்கள். வறுமை நிலையில் இருந்து விடுபட்டு வாழ பிரார்த்தனை செய்திருக்கின்றார்கள். மற்றவர்களையும் இறைவனிடம் பாதுகாப்புத் தேட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். "இறைவா! இறை நிராகரிப்பிலிருந்தும், வறுமையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்;

  "வறுமை, பற்றாக்குறை, இழிவு ஆகியவற்றிலிருந்தெல்லாம் இறைவா! உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்; என்று பிரார்த்தனை செய்திருக்கிறார்கள்.

**இஸ்லாம் வறுமை ஒழிப்புக்கு முன்வைத்துள்ள தீர்வுகள்**

**உழைப்பை வலியுறுத்தியுள்ளமையும் அதன்பால் தூண்டியுள்ளமையும்:**

- "நம்பிக்கையும் நாணயமுமுள்ள வியாபாரிகள் மறுமையில் நபிமார்கள், ஷுஹதாக்கள் மற்றும் நல்லடியார்களுடன் இருப்பார்கள்." (திர்மிதி)
- யாசகம் கேட்டுவந்த வறுமைப்பட்ட மனிதனுக்கு நபி (ஸல்) அவர்கள் கோடாரி வாங்கிக் கொடுத்து வழிகாட்டிய நிகழ்வு.

**ஸகாத் கடமையாக்கப்பட்டுள்ளமையும் அதன் பால் தூண்டப்பட்டுள்ளமையும்**

- "தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸகாத்தை கொடுத்து வாருங்கள்." (அல்குர்ஆன்)
- "ஸகாத் வழங்காது தடுத்துக் கொள்ளும் சமூகத்தினரை அல்லாஹ் பஞ்சத்தைக் கொண்டு சோதிப்பான்." (தபரானி)

**வட்டியில்லாக் கடன் வழங்கல் ஊக்குவிக்கப்பட்டுள்ளமை**

- "நீங்கள் அல்லாஹ்வுக்கு அழகான முறையில் கடன்கொடுத்தால் அதனை உங்களுக்கு இரு மடங்காக்கி வைப்பான்"

**ஸதகா, ஹிபத், ஹதிய்யா போன்றன ஊக்குவிக்கப்பட்டுள்ளமை.**

- "கஞ்சத்தனம் நிறைந்த தொழுகையாளியை விட கல்வியறிவற்ற ஒரு கொடைவள்ளலை அல்லாஹ் மிகவும் விரும்புகிறான்." (திர்மிதி)
- "ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் உணவளியுங்கள்."
- "அண்டை வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் புசித்திருப்பவன் முஃமினாக மாட்டான்" (தபரானி)
- மேலும் வறுமை ஒழிப்பிற்கு இஸ்லாம் காட்டித் தந்துள்ள ஒவ்வொரு வழிமுறையும் ஆன்மீக நடவடிக்கையாகவே கருதப்படுகின்றது.

**வராஸத் (சொத்துப் பங்கீடு) விதிக்கப்பட்டுள்ளமை:**

- "உங்களுடைய சந்ததிகளை வசதியுடையவர்களாகவும் செல்வம் உடையவர்களாகவும் விட்டுச் செல்வது அவர்களை வறியவர்களாகவும் தேவைமிக்கவர்களாகவும் யாசிப்பவர்களாகவும் விட்டுச் செல்வதை விட எவ்வளவோ சிறந்தது." (புஹாரி)

**வீண்விரயம் தடுக்கப்பட்டுள்ளமை**

- "உண்ணுங்கள் பருகுங்கள் வீண்விரயம் செய்யாதீர்கள்." (7:31)

**கப்பாரா, பித்யா போன்றன விதியாக்கப்பட்டுள்ளமை**

- சத்தியத்தை முறித்தவர் பத்து ஏழைகளுக்கு உணவளித்தல். ரமழானில் பகல் பொழுதில் நோன்பாளி மனைவியுடன் உடலுறவு கொண்டால் அறுபது மிஸ்கீன்களுக்கு உணவளித்தல்.
- ஹஜ்ஜில் வாஜிபை விட்டவர் குர்பான் கொடுத்தல் அல்லது பத்து மிஸ்கீன்களுக்கு உணவளித்தல்.

**ஸகாதுல் பித்ர், உழ்ஹிய்யா, அகீகா, நத்ர், குர்பான்**

- இவை போன்ற கிரியைகள் இவைகள் ஏழைகளுக்கு வழங்கப்படுவதன் மூலம் வறுமை நீங்க வழி ஏற்படுகிறது.

**3. வேலையின்மை :**

- உலகின் மட்டுமன்றி எமது நாட்டில் கூட வேலையின்மை ஒரு பிரதான பிரச்சினையாக மாறியுள்ளது.

**தொழில் செய்ய உதவும் நிதி**

More Papers & Online Exams
www.Edukinniya.lk

**ஸகாத்**

- ஸகாத் வாங்குவதற்குத் தகுதியுள்ள ஒரு ஏழையினால் உழைக்கமுடியுமென்றால், அதற்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை அவருக்குச் செய்துதர வேண்டும்; - சட்ட அறிஞர்கள் -
- வேலையற்ற ஒருவருக்கு என்ன தொழில் தெரியுமோ அதற்கு ஸக்காத் மூலம் தேவையான நிதியுதவியை வழங்கிட வேண்டும்.
- வருமானத்துக்குத் தேவையான சிறு கைத்தொழில் வசதிகளுக்கான ஏற்பாடுகளை ஸகாத் நிதி மூலம் ஏற்பாடு செய்தல்.

**கூட்டுத் தொழில் முயற்சிகள்**

- இஸ்லாமிய பொருளாதார முறைமைகளை அறிமுகம் செய்தல்
- முஸாரஆ, முஷாரகா, முழாரபா போன்ற தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்.

**(பிரச்சினைகள் 3ஐ அடையாளப்படுத்திக் குறிப்பிட்டால் 03 புள்ளிகளும், இஸ்லாமிய வழிகாட்டல்கள் 03 விபரித்திருந்தால் 03 புள்ளிகளுமாக 06 புள்ளிகள்)**

(iv) காப்புறுதி (அத்தஃமீன்) அமைப்புக்களைச் செயற்படுத்துதல் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துக.

**அத்தஃமீன் (காப்புறுதி)**

- அத்தஃமீன் என்பது இஸ்லாமிய காப்புறுதி திட்டத்தைக் குறிக்கும்.
- ஒத்துழைப்பு, கூட்டுப் பொறுப்பு என்பவற்றின் அடிப்படையில் நன்கொடைகளைப் பெற்று இயங்கும் ஒரு நலன்புரி நிறுவனமே அத்தஃமீன் எனப்படும்.
- இஸ்லாமிய அரசு தனது ஆட்சியின் நிழலில் வாழும் எல்லாப் பிரஜைகளினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. இது சமூகக் கூட்டுப் பொறுப்பினூடாகவோ அல்லது ஃபைத்துல்மால்; எனப்படும் திறைசேரி மூலமாகவோ நிறைவேற்றப்படுகின்றது.
- பைத்துல்மால் இஸ்லாத்தின் காப்புறுதிக் கம்பனியாகச் செயற்படக் கூடிய ஒரு அமைப்பாகும்.
- நாட்டு மக்களுக்கு அனர்த்தங்கள் ஏற்படும்போது அவர்களுக்கு கைகொடுத்து உதவுவது இஸ்லாமிய அரசின் கடமை.
- இஸ்லாத்தின் கொடுக்கல் வாங்கல் சட்டங்களுக்கு முரண்படாத விதத்தில் காப்புறுதி அமைப்புக்களைச் செயற்படுத்த அனுமதிக்கப்படும்.
- இன்று நடைமுறையில் உள்ள நவீன காப்புறுதிக் கம்பனிகளும் அவற்றின் செயற்பாடுகளும் இஸ்லாத்திற்கும் அதன் அடிப்படைகளுக்கும் முரணானதாகவும், முழுமையாக இலாப நோக்கத்தை மட்டுமே மையமாகக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. இதனாலேயே நடைமுறையில் நாம் காணும் ஆயுள் காப்புறுதி உட்பட அனைத்து வகையான பாரம்பரிய காப்புறுதி அமைப்புகளும் ஹராமானவை என இஸ்லாமிய அறிஞர்கள் கருதுகின்றனர். 'மஜ்மஉ பிக்ஹில் இஸ்லாமி; எனும் இஸ்லாமிய சட்ட மன்றமும் இத்தீர்ப்பையே வழங்கியுள்ளது.
- சூதுக்குரிய பண்புகள், வட்டி, பிறர் செல்வத்தை எத்தகைய பிரதியீடும் இன்றி பெறும் நிலை ஆகியன நவீன காப்புறுதியுடன் தொடர்புபட்டுள்ளன.
- கொடுக்கல், வாங்கலில் இருக்கக் கூடாத மயக்கமான, தெளிவற்ற தன்மைகள் காப்புறுதி ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்டிருப்பதனாலும் இவ்வமைப்புகள் தவிர்க்கப்பட வேண்டும்.
- பாரம்பரிய காப்புறுதி நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படும் ஆயுள் காப்புறுதி அமைப்பு பாரியளவில் இஸ்லாமிய சட்டத்துடன் முரண்படுகின்றது.
- ஏனைய காப்புறுதி முறைகளை (உதாரணம்: அனர்த்தங்களுக்கான காப்புறுதி) சில திருத்தங்கள் செய்வதன் ஊடாக இஸ்லாமிய மயப்படுத்த முடியும்.
- உதாரணமாக இஸ்லாமிய சட்ட அறிஞரான கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, அனர்த்தங்கள் மீதான காப்புறுதியை கஷ்நஷ்ட ஈட்டு நிபந்தனையுடன் கூடிய நன்கொடை; என்ற அடிப்படையில் இஸ்லாமிய முறையில் மேற்கொள்ளலாம் என்கிறார். அதாவது ஒருவர் தனக்கு (பொருள்) ஆபத்து ஏற்படும் போது அதன் இழப்பின் சுமையைக் குறைக்கக்கூடிய ஒரு தொகையைத் தனக்கு நட்ட ஈடாகத் தர வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில் தனது கொடுப்பனவைக் கம்பனிக்கு நன்கொடையாக வழங்குகிறார். அந்தக் கம்பனி வட்டி அமைப்பைத் தவிர்ப்பதாக இருக்கும்போது இக்காப்புறுதி முறை ஷரீஅத்துக்கு உடன்பாடானதாக இருக்கும்.

**(மேற்கூறப்பட்டது போன்ற கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 8 = 8 புள்ளிகள்)**

4. (i) இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் நான்கினை அல் குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரங்களுடன் விளக்குக.

- கலிமா
- தொழுகை
- ஸகாத்
- நோன்பு
- ஹஜ்

More Papers & Online Exams
www.Edukinniya.lk

**கலிமா**

- இஸ்லாம் ஐந்து அம்சங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சான்று பகர்தல், தொழுகையை நிலைநிறுத்துதல், ஸகாத்தைக் கொடுத்தல், ரமழானில் நோன்பு நோற்றல், ஹஜ் செய்ய வசதியுள்ளவர்கள் அதனை நிறைவேற்றல்" (அல் ஹதீஸ்)
- ஒருவன் கலிமாவை மொழிவதன் மூலம் இஸ்லாத்தினுள் நுழைகின்றான். கலிமாவோடு மரணிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறான்.
- "யார் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லையென்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் மொழிகின்றாரோ, அவர் சுவனம் நுழைந்துவிட்டார்"

**தொழுகை**

**மொழி ரீதியாக**

- ஸலாத் என்பது பிரார்த்தனை, முக்கிய பாகம், முதுகெழும்பு போன்ற கருத்துக்களைக் கொடுக்கும். பரிபாஷையில்
- "இஹ்றாம் தக்பீருடன் ஆரம்பிக்கப்பட்டு பர்ளான, ஸுன்னத்தான ஓதல்களையும், பர்ளான, ஸுன்னத்தான செயற்பாடுகளையும் உள்ளடக்கி ஸலாத்துடன் முடிவடைகின்ற, அல்லாஹ்வுக்காக நிறைவேற்றப்படுகின்ற ஒரு வணக்கமாகும்".

**ஆதாரம்**

- "நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான, வெறுக்கத்தக்க கருமங்களிலிருந்து (மனிதனைப்) தடுக்கும்"(29:45)
- "முஸ்லிமுக்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்" (முஸ்லிம்)
- "என்னை நினைவுகூர்வதற்காக தொழுகையை நிலைநாட்டுங்கள்"
- "தொழுகை சுவனத்தின் திறவுகோலாகும்"
- அல்லாஹ் ஏனைய கடமைகளை இவ்வுலகில் வைத்தே கடமையாக்கினான். ஆனால் தொழுகை விண்ணுலகில் வைத்து நபி (ஸல்) அவர்களுக்க பரிசாக வழங்கப்பட்ட ஒன்றாகும்.
- "நிச்சயமாக தொழுகை நேரம் குறிக்கப்பட்ட ஒரு கடமையாகும்."

**ஸகாத்**

**மொழி ரீதியாக :** ஸகாத் என்ற அரபுச் சொல் வளர்ச்சி, அதிகரிப்பு, அருள், தூய்மை,பேறு, சீர்மை போன்ற கருத்துக்களைத் தருகின்றது.

**பரிபாசை ரீதியாக :** "ஸகாத்விதியாவதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற முஸ்லிம்கள் தமது சொத்தில் அல்லது செல்வங்களில் இருந்து அவற்றின் நிஸாபையும் காலத்தையும் அடைந்ததன் பின்னர் அல்லாஹ் விதியாக்கிய குறித்த விகிதத்தை எடுத்து குர்ஆன் கூறும் எட்டுக் கூட்டத்தினரிடையே பகிர்ந்தளிக்கும் அமைப்பைக் கொண்ட கடமையாகும்."

பரிபாஷை ரீதியாக : "ஸகாத்விதியாவதற்குரியநிபந்தனைகளுக்கு உட்படுகின்றமுஸ்லிம்கள்தமதுசொத்தில் அல்லது செல்வங்களில் இருந்து அவற்றின் நிஸாபையும் காலத்தையும் அடைந்ததன் பின்னர் அல்லாஹ் விதியாக்கிய குறித்த விகிதத்தை எடுத்து குர்ஆன் கூறும் எட்டுக் கூட்டத்தினரிடையே பகிர்ந்தளிக்கும் அமைப்பைக் கொண்ட கடமையாகும்."

- "(நபியே!) அவர்களின் செல்வங்களிலிருந்து ஸகாத்தை எடுத்து, அதனால் அவர்களை உள்ளும், புறமும் தூய்மைப்படுத்துவீராக" (அல்குர்ஆன் 9:103)
- "ஸகாத் மூலம் நீங்கள் உங்கள் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" (அபூதாவூத்)
- தொழுகையுடன் இணைத்து ஸகாத் குர்ஆனில் சுமார் 27 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- "தொழுகையினை நிலைநாட்டுங்கள், ஸகாத்தைக் கொடுங்கள்" (அல்குர்ஆன் 2:110)

**நோன்பு**

**மொழி ரீதியாக:** 'ஸவ்ம்' என்பது தவிர்த்தல், தவிர்ந்துகொள்ளல், எனும் மொழிக் கருத்தை இது தருகின்றது.

**பரிபாஷையில்:** "அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்து கிழக்கு வெளுத்தது முதல் சூரியன் அஸ்தமிக்கும் வரை உண்ணல், பருகல், உடலுறவுகொள்ளல் போன்ற நோன்பை முறிக்கும் காரியங்களில் ஈடுபடாமல் இருத்தல்"

- அடிப்படை அல்லது தலையாய வணக்கங்களில் ஒன்றாக இது உள்ளமை.
- நோன்பின் முக்கியத்துவத்தை குர்ஆனும், ஸுன்னாவும் எடுத்துக்கூறுகின்றமை
- "ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன்பிருந்தோர் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீங்கள் தக்வாவைப் பெற்றுக் கொள்வீர்கள். (2:183)

**ஹஜ்**

**மொழி ரீதியாக :** ஹஜ் என்ற பதம் தரிசித்தல், நாடுதல் எனும் கருத்துக்களைத் தருகின்றது.

**பரிபாஷையில் :** துல்ஹஜ் பிறை 8-13 வரையுள்ள தினங்களில் குறித்த சில நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற முஸ்லிம்கள்ஹஜ்ஜுக்குரியவிதிமுறைகளைஅனுசரித்துபுனிதமக்கமாநகரத்திலுள்ளகுறித்த தலங்களுக்குச் சென்று அல்லாஹ்வுக்காக நிறைவேற்ற வேண்டுமென விதிக்கப்பட்டுள்ள கடமையினை குறிக்கின்றது."

- "எவரேனும் ஒருவர் முற்றிலும் அவசியமான தேவையோ, கொடுங்கோல் அரசனின் தடைகளோ, பிரயாணம் செய்ய முடியாதவாறு பீடித்துள்ள நோயோ ஹஜ் செய்வதைத் தடுக்காதிருந்த பின்னரும் அவர் ஹஜ்ஜுக்குச் செல்லாமல் இருந்தால் அதே நிலையில் அவருக்கு மரணம் வந்துவிட்டால் யூதனாகவோ, நஸாராவாகவோ அவர் விரும்பியவாறு இறக்கட்டும்." (தாரமி)
  "நாம் இந்த ஆலயத்தை மனிதர்கள் ஒதுங்கும் தலமாகவும், அபயமளிக்கக்கூடியதாகவும் ஆக்கினோம் "(2:125)

- இவ்வுலக வாழ்வு தற்காலிகமானது மறுமை வாழ்வு நிரந்தரமானது என்ற இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையை ஆழப் பதியவைக்கும் கடமை.
- அல்லாஹ்விற்கு அடிமைப்படுதல், தன்னை அர்ப்பணித்தல், தியாகம் செய்தல் முதலான பண்புகளை வளர்க்கின்ற கடமை.
- முஸ்லிம்கள் ஓர் இறைவனை ஏற்று, ஒரு கொள்கையின் அடிப்படையில் வாழ்ந்து ஓர் இலக்கை நோக்கிச் செல்லும் தனித்துவமானவர்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தும் கடமை.
- புனித மக்கமா நகரை அடிப்படையாக வைத்து இக்கடமையை செயற்படுத்துவதால் நபிமார்களது வரலாறுகளை நினைவுபடுத்தி ஒரு முஸ்லிம் தனது பணியினை திட்டமிட்டுக் கொள்ள வழி வகுக்கும் கடமை.
- ஹஜ்ஜுக்காக அணியும் ஆடை எளிமையான வாழ்வை மேற்கொள்ளப் பயிற்சி அளிப்பதோடு மறுமையை நினைவு கூர்வதற்கும் அடிப்படையாக உள்ளமை.

**(ஐந்து கடமைகளும் குறிப்பிடப்பட்டிருந்தால் இரண்டு புள்ளிகளும் அவற்றுள் நான்கு கடமைகள் அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆதாரங்களுடன் எழுதப்பட்டிருந்தால் $4 \times 2 = 8$ புள்ளிகளுமாக $2 + 8 = 10$ புள்ளிகள்)**

(ii) மகாஸிதுஷ் ஷரீஆவின் மூன்று படிநிலைகளையும் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை விளக்குக.

1. ழரூரிய்யாத் – அத்தியவசிய நிலை (அத்தியசிய தேவைகள்)
2. ஹாஜிய்யாத் – தேவை நிலை (சாதாரணத் தேவைகள்)
3. தஹ்ஸீனிய்யா – ஆடம்பர நிலை (மேலதிக தேவைகள்)

More Papers & Online Exams
www.Edukinniya.lk

அத்தியவசிய நிலை : ழரூரிய்யாத்

- இதனை அத்தியவசியத் தேவையென்றும் குறிப்பிடலாம்.
- மனித குலத்தின் வாழ்வு எதில் தங்கியுள்ளதோ அவ்வாறான நலன்களே ழரூரிய்யாத் என அழைக்கப்படுகின்றது.
- இந்த வகையான நலன்கள் புறக்கணிக்கப்பட்டால் மனித வாழ்வு சீர்குலைந்துவிடும், குழப்பங்கள் நிறைந்ததாகமாறும், பெரும் அழிவுக்கும் சீர்கேட்டுக்கும் இட்டுச் செல்லும்.
- அத்தியவசிய நிலைத் தேவைகளை இமாம்கள் ஆறு பகுதிகளாகப் பிரித்து நோக்கினர். அவை தீன், உயிர், புத்தி, பரம்பரை, மானம், செல்வம் என்பனவாகும்.

1. தீனைப் பாதுகாத்தல்

   தீனை வளர்த்தல், பாதுகாத்தல் என்பதுவே இதன் நோக்கமாகும். தீனை பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளும் இதில் உள்ளடங்கும்

2. உயிரைப் பாதுகாத்தல்

   - உயிரைப் பாதுகாப்பதற்கும், போஷிப்பதற்குமாக உணவு, பானம், ஆடை என்பனவற்றின் மூலம் உத்தரவாதப் படுத்தப்படுகின்றது.
   - மனித உயிர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் அல்லது சுற்றாடல் சுத்தம் பேணும் நடவடிக்கைகள் போன்றவற்றை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

3. புத்தியைப் பாதுகாத்தல்

- புத்தியைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே மதுபானம் அருந்துதல், ஏனைய போதைப் பொருட்களைப் பாவித்தல் என்பன தடுக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான தண்டனைகளையும் இஸ்லாம் விதித்துள்ளது.

4. பரம்பரையைப் பாதுகாத்தல்

- பரம்பரையைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே திருமணம் ஊக்கப்படுத்தப்பட்டு விபசாரம் தடுக்கப்பட்டு, அதற்கு தண்டனையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5. மானத்தைப் பாதுகாத்தல்

- தனது மானத்தையும் பிறரது மானத்தையும் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். அதனைக் களங்கப்படுத்துவது பாவமாகும். இதனாலேயே படுதூறு, லிஆன் போன்றவற்றை இஸ்லாம் தடுத்துள்ளதோடு அவற்றைப் பாவமாகக் கருதி தண்டனைகளையும் நிர்ணயித்துள்ளது.

6. செல்வத்தைப் பாதுகாத்தல்

- இஸ்லாம் ஹலாலான வழியில் உழைப்பதை வலியுறுத்தியுள்ளது. பிறரது சொத்துக்களை அபகரித்தல், திருடுதல், பதுக்கல், வட்டி, ஊழல், ஏமாற்று போன்ற பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கும் அனைத்தையும் இஸ்லாம் தடுத்துள்ளது.

2. தேவை நிலை : ஹாஜிய்யாத்

- மனிதர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள், அசௌகரியங்களை நீக்குவதை வேண்டி நிற்பதே ஹாஜிய்யாத் நிலையாகும்.
- இப்பிரிவைச் சார்ந்த நலன்கள் ழரூரிய்யத்தை விட படித்தரத்தில் குறைந்தவை.
- இவை இல்லாவிடின் வாழ்க்கை ஒழுங்கு சீர்குலையாது, சமூகத்தின் இழப்புக்கு அச்சுறுத்தலாகவும் அமையாது, எனினும் வாழ்வின் நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் எதிர்கொள்ள நேரிடும்.
- உதாரணமாக நோயாளி, பிரயாணி ஆகியோர் ரமழான் நோன்பு நோற்பதிலிருந்து விதிவிலக்குப் பெற்று பிறிதொரு காலத்தில் நிறைவேற்றிக்கொள்ள சலுகை வழங்கப்பட்டுள்ளமை.
- "அல்லாஹ் உங்கள் மீது எந்தவொரு சிரமத்தையும அசௌகரியத்தையும் ஏற்படுத்த விரும்பவில்லை" (5:6)
- "நபியவர்களுக்கு முன் இரண்டு விடயங்கள் முன்வைக்கப்பட்டால், பாவம் இல்லாவிடில் அவற்றில் மிக இலகுவானதையே அவர் தேர்ந்தெடுப்பார்கள்"

ஆடம்பர நிலை : தஹ்ஸீனிய்யாத் அல்லது தக்மீலிய்யாத்

- உயர்ந்த ஒழுக்க விழுமியங்களுக்கும் சீரிய பண்பாடுகளுக்கும் இணங்க மனித வாழ்வு அமைவதற்குத் தேவையான நலன்களே தஹ்ஸீனிய்யாத் எனப்படும்
- இது தக்மீலீய்யாத் எனவும் அழைக்கப்படும்.
- இந்த வகையான நலன்கள், ழரூரிய்யாத், ஹாஜிய்யாத் வகையான நலன்களை விடவும் தரத்தில் குறைந்தவை.

- இவை இல்லாவிடில் வாழ்வொழுங்கு சீர்குலையவோ, சிக்கலானதாக அமையவோ அசௌகரியமும் நெருக்கடி நிலையும் ஏற்படவோ மாட்டாது.

  உதாரணமாக : வெள்ளிக்கிழமை தினங்களில் வெள்ளாடை அணிதல்.

**(மூன்று படிநிலைகளும் குறிப்பிடப்பட்டிருந்தால் 3 புள்ளிகளும் அதில் ஏதாவதொரு தலைப்பில் ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 7 புள்ளிகளுமாக மொத்தம் 3 + 7 = 10 புள்ளிகள் )**

5. (i) இஸ்லாத்தில் திருமணத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு, திருமணத்தின்போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களை அடையாளப்படுத்தி விளக்குக.

- இஸ்லாம் திருமணத்தை இபாதத் ஆகக் கருதுவதால் அது முக்கியத்துவம் பெறுகிறது.
- அல்குர்ஆன் குடும்ப வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

  "(ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி) உங்களில் வாழ்க்கைத் துணை இல்லாதோருக்கு திருமணம் செய்து வையுங்கள்" சூரதுன்னூர் " (அல்குர்ஆன் 24 : 32)
- நபி (ஸல்) அவர்களின் வழிமுறை குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

  "வாலிபர்களே உங்களில் சக்தி உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளட்டும். ஏனெனில், அது பார்வையை தாழ்த்தும், மர்மஸ்தானத்தைப் பாதுகாப்பதற்கும் சிறந்ததாகும். சக்தியற்றவர்கள் நோன்பு நோற்றுக் கொள்ளட்டும். அது அவருக்கு பாதுகாப்பாகும்" -புகாரி-
- திருமணம் என்பது நபிமார்களின் வழிமுறையாக இருந்து வந்திருக்கிறது.

  "திருமணம் எனது வழிமுறையாகும் யார் எனது ஸுன்னாவை புறக்கணிக்கின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவர் அல்லர்".
- திருமணத்தின் இலக்குகள் அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது
- திருமணவாழ்வு தரும் பயன்களினூடாகவும் அதன் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளலாம்

**திருமணத்தின் போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள்**

- இஸ்லாமிய சட்ட விதிகளை புறக்கணித்து நடத்தல்
- சீதனம், கைக்கூலி என்பவற்றை தவிர்த்தல்
- ஆண் மணப்பெண்ணை பார்க்காது குடும்பத்தினரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப மணப்பெண்ணை தேர்ந்தெடுத்தல்.
- மணப்பெண்ணிடம் அனுமதி பெறுவதை புறக்கணித்தல்.
- திருமண ஒப்பந்தத்திற்கு முன்னர் ஆண் பெண் இருபாலாரும் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- திருமணத்தின் போது ஆண் - பெண் கலப்பு, இசை, இஸ்லாம் அனுமதிக்காத ஆடை அலங்காரங்கள், ஒப்பனைகளை செய்தல்.
- வீண் விரயம் செய்தல் (உதாரணமாக ஆடம்பரமான விருந்துபசாரங்களை ஏற்படுத்திக்கொள்ளல்)
- மணமகன் மணமகள் ஆகியோரை பகடிவதைக்கு உட்படுத்தல்.
- பெண்பார்த்தல் என்ற பெயரில் இஸ்லாமல்லாத சம்பிரதாயங்களைப் பின்பற்றுதல்.

**(முக்கியத்துவத்திற்கு 5 புள்ளிகளும் தவிர்க்கப்பட வேண்டியவைகளுக்கு 5 புள்ளிகளுமாக மொத்தம் 5 + 5 = 10 புள்ளிகள் )**

(ii) சொத்துப் பங்கீட்டு விடயத்தில் இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் நடைமுறைகளைக் குறிப்பிட்டு, வாரிசுரிமைக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை விளக்குக.

**சொத்துப் பங்கீட்டு விடயத்தில் இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் நடைமுறைகள்**

- சொத்துரிமையாளர் மரணிப்பதற்கு முன்னரே சொத்து பிரிக்கப்படுதல்.
- சொத்துக்கள் சமமாகப் பகிரப்படுதல்.
- வீட்டில் இளைய குழந்தைக்கு தந்தையின் அல்லது தாயின் வீடு உரித்தாகும்.
- வீட்டை பராமரித்தவர் வீட்டுக்கு உரிமையாளராக மாறுதல்.
- சிலர் பெண்களுக்கு சொத்தில் அதிக பங்கை வழங்க இன்னும் சிலர் பெண்களுக்கு சொத்துக்களை வழங்காமல் விடுதல்.
- வளர்ப்புப் பிள்ளைக்கு வாரிசுச் சொத்தில் பங்கு கொடுத்தல்.
- அனந்தரக்காரர்களை கவனத்தில் கொள்ளாது மரணித்தவரது பிள்ளைகளுக்கு மாத்திரம் பங்கு வைத்தல்.
- வஸிய்யத்துக்களை நிறைவேற்றாமல் சொத்துக்களை பிரித்தல்.
- மரணித்தவர்களது கடன், கடமைகளை நிறைவேற்றாமல் சொத்துக்களை பகிர்தல்.

**வாரிசுரிமைக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவம்**

- அல்குர்ஆனில் வாரிசுரிமை தொடர்பாக பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றமை.
  - "பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச்சென்ற (சொதி)தில் பெண்களுக்கும் பாகமுண்டு (அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந்தாலும் சரி அதிகமாக இருந்தாலும் சரியே (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும்" (அல்குர்ஆன் 4 : 07)
  - வாரிசுரிமை உரிய முறையில் நிறைவேற்றாதோருக்கு நிரந்தர நரகம் உண்டென அல்குர்ஆன் எச்சரிக்கின்றது.

    "இன்னும் அவன் விதித்துள்ள வரம்புகளை மீறுகிறானோ அவனை நரகில் புகுத்துவான் அவன் அங்கு
    (என்றென்றும்) தங்கி விடுவான்" (அல்குர்ஆன் 4:14)
  - அல்குர்ஆன் அதனை 'பர்ளு' என்று குறிப்பிடுகின்றமை.
  - அல்குர்ஆன் வேறு எந்த விடயத்தையும் பேசாத அளவு வாரிசுரிமை பற்றி பேசியுள்ளமை அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
  - அஸ்ஸுன்னா வாரிசுரிமையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
  - "நீங்கள் வாரிசுரிமை சட்டத்தைக் கற்று அவற்றைப் பிறருக்கும் கற்பிப்பீர்களாக. ஏனெனில், அது அறிவின் ஒரு பகுதியாகும். மேலும் இக்கலை மறக்கக்கூடியதாகும் இதுவே, எனது சமூகத்திலிருந்து அகற்றப்படும் முதல் அம்சமாகும்" (இப்னு மாஜா)
  - ஸஹாபாக்கள் வாரிசுரிமைச் சட்டத்தைக் கற்பதில் காட்டிய அதீத ஈடுபாடு அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

- பாகப் பிரிவினை பொருளாதார விருத்தியில் பாரிய பங்காற்றுகிறது. எனவே அது உரிய முறையில் பகிரப்படும்போதுதான் பொருளாதார விருத்தியை எதிர்பார்க்க முடியும். எனவே பாகப் பிரிவினை முக்கியத்துவம் பெறுகிறது.
- பாகப்பிரிவினை சரியான முறையில் இடம்பெறாமை குடும்ப, சமூக ஒற்றுமை சீர்குலைவதற்கு ஒரு பிரதான காரணமாக அமையும்.

**(நடைமுறை சொத்து பங்கீட்டுக்கு 5 புள்ளிகளும் வாரிசுரிமையின் முக்கியத்துவத்துக்கு 5 புள்ளிகளுமாக மொத்தம் $5 + 5 = 10$ புள்ளிகள்)**

**($10 + 10 = 20$ புள்ளிகள்)**

6. (i) இஸ்லாம் போதிக்கும் சமய, சமூக நல்லிணக்கத்தின் அடிப்படைகளில் ஐந்தைக் குறிப்பிட்டு, அவற்றைத் தெளிவுபடுத்துக.

1. **அனைத்து மனிதர்களும் ஒரே இறைவனான அல்லாஹ்வின் படைப்பினம்**
   "மக்களே! நாம் உங்களை நிச்சயமாக ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். பின்னர் உங்களை நீங்கள் ஒவ்வொருவரும் பரஸ்பரம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சிறு சிறு குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்" (அல்குர்ஆன் 49 : 13

2. **உலகிலுள்ள அனைத்து மனிதர்களும் கண்ணியமானவர்கள்.**
   "நாம் ஆதமின் சந்ததியினரை கண்ணியப்படுத்தி விட்டோம்" (அல்குர்ஆன் 17 : 70)

3. **கொள்கைச் சுதந்திரம்**
   "மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது" (அல்குர்ஆன் 2 : 256)

4. **மனித குலத்திற்கு நன்மை பயப்பது ஒவ்வொரு மனிதர் மீதும் கடமை** "மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பம். அல்லாஹ்வின் குடும்பத்திற்கு மிகவும் பயனுள்ளவர்களே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர்கள்" (முஸ்லிம்)

5. **எல்லா மனிதர்களும் சகோதரர்கள்**
   மனித இனத்தின் மூதாதையர் ஆதமும் ஹவ்வாவுமே. அதனால் மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள்.

6. **எல்லா மனிதர்களும் அடிப்படையில் நல்லவர்கள்**
   எல்லா மனிதர்களும் அடிப்படையில் நல்லவர்கள். சூழ்நிலைகளே தன்மையைப் பாதிக்கின்றது.

7. **சமூகங்கள், மொழிகள் போன்ற மதங்களிலுள்ள பன்மைத்துவம் இறை நியதிகளில் ஒன்று.**
   "உமது இரட்சகன் நாடியிருந்தால் அனைத்து மக்களையும் ஒரே சமூகமாக ஆக்கியிருக்கலாம். ஆயினும் மக்கள் தொடர்ந்து கருத்து வேறுபாடு கொண்டவர்களாகவே உள்ளனர். (அல்குர்ஆன் 11 : 118)

**8. பரஸ்பர உதவிகள்**

"மார்க்க விடயத்துக்காக உங்களுக்கெதிராகப் போராடாமலும் , உங்கள் வீடுகளிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருப்பவர்களுக்கு நீங்கள் உதவி செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செலுத்துவதையும் விட்டு உங்களை அல்லாஹ் தடுக்கமாட்டான்". (அல்குர்ஆன் 60 : 08)

**9. யாவருக்கும் பொதுவான முறையில் நீதி செலுத்தப்பட வேண்டும். -"நீர் மோசடிக்காரர்களுக்காக வாதிடுபவர்களில் ஒருவராக இருக்காதீர்..." (அல்குர்ஆன் 4: 105)**

**10. கரைந்துவிடாமல் கலந்து வாழ்வது**

சமூக, மத நல்லிணக்கம் என்ற பெயரில் மார்க்கத்தின் அடிப்படையிலான அம்சங்களில் ஒரு போதும் நெகிழ்ந்து கொடுக்க முடியாது. தமது தனித்துவங்களை பேணிக் கொண்ட நிலையில் பிறரை மதித்து, கௌரவித்து இணங்கி வாழ்தல் வேண்டும்

**(இவைபோன்ற ஐந்து விடயங்கள் குறிப்பிட்டு விளக்கப்பட்டிருந்தால் 5 x 2 = 10 புள்ளிகள்)**

(ii) நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய மதீனா அரசில் மேற்கொள்ளப்பட்ட சமய, சமூக நல்லிணக்கத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்குக.

- இஸ்லாமிய வரலாற்றில் மதீனா அரசில் சமய, சமூக நல்லிணக்கமானது உயர்ந்த நிலையில் பேணப்பட்டு வந்துள்ளது.
- முஸ்லிம்கள் மதீனாவுக்கு வந்தவுடன் அமைத்த இஸ்லாமிய அரசில், முஸ்லிம் அல்லாதவர்களும் திம்மீக்கள் என்ற பெயரில் வாழ்வதற்கும் சமூக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டார்கள்.
- நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய மதீனா அரசில் வாழ்ந்த எல்லோரும் எல்லாவிதமான உரிமைகளையும் பெற்று வாழ்ந்தனர்.
- யூதர்களும், முஸ்லிம்களும் தத்தமது சமயத்தை முழுமையாகப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் வழங்கப்பட்டமை.
- இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் யூதர்கள் நீதியாக நடத்தப்பட்டமை.
- பொது நன்மைகளை எட்டுவதற்காக யூதர்களும், முஸ்லிம்களும் பரஸ்பரம் உதவிக்கொண்டதோடு, பாவங்கள் அத்துமீறல்களுக்கு எதிராக செயற்பட்டமை.
- யாராவது ஏதும் ஒரு தவறு செய்தால் அது அவனுக்கு எதிரானதாக மட்டுமே பார்க்கப்பட்டதுடன், அது சமூக விவகாரமாக பார்க்கப்படவில்லை.
- நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களோடு நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தம் சிறந்த வரலாற்றுச் சான்றுகளாக உள்ளமை.
- நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்கள் மதீனா வந்த போது நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுன் நபவியில் வரவேற்று தங்க வைத்ததோடு மஸ்ஜிதின் ஒரு பகுதி யில் தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இடமளித்து, அவர்கள் தமது மார்க்கம் பற்றி விவாதித்த போது அதற்குச் செவிமடுத்து மிகவும் இங்கிதமான முறையில் கேள்விகளுக்கு விடை பகிர்ந்தமை.

- பிற சமுதாயத்தவர்கள் தமக்கருகில் வாழ்வதற்கு முஸ்லிம்கள் அங்கீகாரம் வழங்கியதுடன் மாத்திரமன்றி அவர்களுடன் சகல விதத்திலும் சமூக உறவுகளைப் பேணி வந்துள்ளமை.
- முஸ்லிம்கள் மதீனாவுக்கு வந்தவுடன் அமைத்த இஸ்லாமிய அரசில், முஸ்லிம் அல்லாதவர்களும் பாதுகாப்பைப் பெற்றமை.
- மதீனாவில் முஸ்லிம் அல்லாத யூத, கிறிஸ்தவர்களும் பல தெய்வ வணக்கத்தில் ஈடுபட்டவர்களும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் தாராளமாக ஈடுபட்டமை. நபி (ஸல்) அவர்களும் அவர்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டமை.
- முஸ்லிமல்லாதவர்களது வீடுகளுக்கு நபி (ஸல்) அவர்கள் விருந்துகளுக்கு சென்றுள்ளமை.
- நபி (ஸல்) அவர்களும் அன்னாரது தோழர்களும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு வறுமை, நோய், இறப்பு போன்ற துன்பங்கள் சம்பவித்த போது மனிதாபிமான உதவிகளைச் செய்தமை.
- முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து அன்பளிப்புக்ளைப் பெற்றதுடன் அதற்குப் பதிலாக அன்பளிப்புக்களை வழங்கியமை... உதாரணம் எகிப்தின் முகௌகஸ் மன்னன்.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

**(10 + 10 = 20 புள்ளிகள்)**

7. (i) இலங்கை முஸ்லிம்களின் அரசியல், சமூக, கலாசார முன்னேற்றத்தில் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சாதக நிலைமைகளைத் தெளிவுபடுத்துக.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல், சமூக, கலாசார முன்னேற்றத்தில் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சாதக நிலைமைகள்

அரசியலில் ஏற்பட்ட சாதக நிலைமைகள்

- ஆட்சியாளர்களின் ஆதரவு கிடைத்தமை.
- முக்கிய பதவிகளில் முஸ்லிம்கள் அமர்த்தப்பட்டமை.

  உ-ம் : கண்டியின் இறுதி மன்னனான சிறி விக்ரம ராஜசிங்கனின் (கி.பி.1798 - 1815) காலப்பிரிவில் பிரதம

  நீதிபதியாகராஜ கருண கோபால் முதியான்ஸே ராலகாமி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்த முஸ்லிம் பிரமுகர் கடமையாற்றினார்.
- தூதுவர்களாக கடமையாற்றக் கிடைத்தமை. கி.பி.1762 இல் இலங்கைக்கு வந்த ஆங்கிலேய தூதுவரான ஜோன் பைபஸை வரவேற்று அழைத்துவர உதுமான் லெப்பே என்பவர் அனுப்பப்பட்டார்.
- அரச திணைக்களங்களின் தலைவர்களாக கடமையாற்றக் கிடைத்தமை. மடிகேபத்த நிலமே பதவியை ஷேக் ஆலிம், ஷேக் அப்துல் காதிர் ஆகியோர் வகிக்கக் கிடைத்தமை.
- கி.பி. 1810 ஆம் ஆண்டு தேசிய இராணுவத்தில் 850 முஸ்லிம் வீரர்கள் இடம்பெறக் கிடைத்தமை.

More Papers & Online Exams
www.Edukinniya.lk

**சமூக முன்னேற்றத்தில் ஏற்பட்ட சாதக நிலைகள்**

- கீர்த்தி சிறி ராஜசிங்கன் (1749 - 1781) காலப்பிரிவிலும் அதனைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் 'பெஹெத்கே முஹாந்திரம் நிலமே' என்ற பதவி யில் வகித்த பல முஸ்லிம் மருத்துவர்கள் இருந்துள்ளமை. இவர்கள் உடுநுவர தொகுதியில் அரசனால் நிலங்கள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டமை.
- இத்தகைய மருத்துவர்களுக்கு 'ராஜபக்ஷ வைத்தியலாகே கோபால முதலி', 'ராஜகருண வைத்தியலாகே கோபால முதலி' எனும் பெயர் வழங்கி கௌரவிக்கப்பட்டமை.
- கண்டி, கொழும்பு, காலி, மாத்தறை பிரதேசங்களில் ஒல்லாந்தர் நிறுவிய வைத்தியசாலைகளில் முஸ்லிம் மருத்துவர்கள் பணிபுரிந்தமை. இதில் பிரதம வைத்தியர்களாக கி.பி. 1791 இல் மீராலெப்பை மேஸ்தியார், சேக் மரிக்கார், சேக் லெப்பை ஆகியோர் இருந்தமை.
- தேசிய வர்த்தகத்தில் முன்னிலை வகிக்கக் கிடைத்தமை.
- மார்க்க அறிஞர்கள் பலர் இலங்கையை தரிசித்தமையால் மார்க்க மற்றும் கல்வி விழிப்புணர்வு ஏற்பட்டமை. உதாரணம்: ஒராபி பாஷா
- மலாய் சமூகம் இலங்கையில் தோற்றம் பெற்றமை.
- தென்னிந்திய வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டமையினால் வர்த்தக முன்னேற்றம் முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்டது.

**கலாசார முன்னேற்றத்தில் ஏற்பட்ட சாதக நிலைகள்**

- அறபிகளினதும் தென்னிந்திய முஸ்லிம்களினதும் கலாசார தாக்கங்கள் ஏற்பட்டமை.
- அல்குர்ஆனையும் மார்க்க விடயங்களையும் கற்பதற்கான வாய்ப்புகள் குத்தாபுகள் மூலம் ஏற்பட்டமை.
- அரபு மத்ரஸாக்களின் தோற்றம் கலாசாரத்தில் ஏற்பட்ட ஒரு சாதக நிலையாகும். (மத்ரஸ்துல் பாரி, பஹ்ஜதுல் இப்ராஹிமிய்யா)
- கட்டடக் கலையில் சில சாதக நிலைகள் ஏற்பட்டமை. (மஸ்ஜிதுகளின் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள். மிம்பர், மினாரா, குப்பா...)
- ஸாவியாக்கள், தைக்காக்களின் தோற்றம் முஸ்லிம்களது ஆன்மீகத் துறையில் சாதக நிலை ஏற்படுத்தியமை.
- தரீக்காக்களின் செல்வாக்குகள் சமய, கலாசார முன்னேற்றத்தில் ஏற்பட்ட சாதக நிலைகளாகும்.

**(இவை போன்ற அரசியல், சமூக, கலாசார சாதக நிலைகள் ஐந்தை விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

(ii) சுதந்திரத்துக்கு முற்பட்ட இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பணிகளை விரிவாக ஆராய்க.

- **இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் மூலம் விவசாயம் முதலான பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு உதவியமை:**
  - அநுராதபுரக் காலத்தில் மேலோங்கி நின்றிருந்த விவசாயப் பொருளாதாரமும் அதனோடு தொடர்பான நீர்ப்பாசனக் கட்டமைப்புகளும், முஸ்லிம்களின் கைகளில் தங்கியிருந்த வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் கிடைத்த மேலதிக வருவாய்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

    பேராசரியர் ஆர் ஓ. எல். எச். குணவர்தன -
- **முஸ்லிம்கள் அறிமுகப்படுத்திய தவளம் போக்குவரத்து முறை:**
  - மலை நாட்டுக்கும் துறைமுக நகரங்களுக்கும் பொருளாதாரத் தொடர்பு ஏற்படுத்தியமை. (கண்டி மன்னன் இராஜசிங்கனை 1762இல் சந்திக்கச் சென்ற ஆங்கிலேயத் தூதுவர் ஜோன் பைபஸ் முஸ்லிம்வியாபாரக் கூட்டம் ஒன்றைக் கண்டதாகக் குறிப்பிடும் கருத்து)
- **நெசவுத் தொழிலையும் அறிமுகம் செய்து வைத்தமை:**
  - பேருவளையில் வாழ்ந்த முஸ்லிம் வணிகஉ ஒருவரால் 12-13ஆம் நூற்றாண்டுகளில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமை (அலெக்சான்டர் ஜோன்ஸ்டன்)
- **கறுவாப் பயிர்ச் செய்கையிலும், அதனைப் பதனிடுவதிலும் முன்னோடிகளாக காணப்பட்டமை**
  - கடலோர மாகாணங்களில் கறுவா பயிரிடுதல், பதனிடுதல் போன்றவற்றை முஸ்லிம்களே செய்தனர். (அலெக்சான்டர்ஜோன்ஸ்டன்)
- **சர்வதேச வணிகத்தை தன்னகத்தே கொண்டிருந்தமையும் அதனை முன்னேற்றியமையும்:**
  - இலங்கையின் வணிகப் பொருட்களை அன்று சர்வதேச சந்தையாக விளங்கிய பக்தாத் உள்ளிட்ட பகுதிகளுக்கு எடுத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்து இலங்கையின் சர்வதேச வணிகத்தை விருத்தி செய்து வைத்தமை.
  - பொலனறுவையின் பொற்காலத்துக்கு உரிமை கோரும் மன்னனான மகா பராக்கிரமபாகு (கி.பி.1156-1186) வின் காலப்பிரிவில் வணிகத்துறையின் அபிவிருத்திக்காக உருவாகியிருந்த 'அந்தரங்கதுர' என்ற மேல்சபையில் முஸ்லிம்கள் நான்கு பேர் அங்கம் வகித்தமை.
  - இலங்கையில் இரத்தினக்கற்களை சர்வதேச வர்த்தக உலகிற்கு முஸ்லிம்கள் அறிமுகப்படுத்தியமை. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் அல் பெருனி எழுதிய 'கிதாபுல் ஜமாஹிர் பீ மஃரிபதில் ஜவாஹிர்' என்ற நூலில் இலங்கையின் இரத்தினக்கல் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை.
  - ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றிய காலப்பிரிவுகளிலும் தேசிய வர்த்தகத்தில் முஸ்லிம்களே முன்னணி வகித்தமை. கரையோரப் பகுதிகளில் இருந்து முஸ்லிம்கள் துரத்தப்படுவதற்கும் அவர்கள் பெற்றிருந்த வர்த்தக வலிமையே பிரதான காரணமாகியமை.
  - 19 ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டத்துறை அறிமுகமாகிய போது குறிப்பிடத்தக்களவு முஸ்லிம்களும் பெருந்தோட்டத்துறை உரிமையாளர்களாகக் காணப்பட்டமை.
  - இவை தவிர ஏற்கனவே இருந்த இரத்தினக்கல் வியாபாரத்திலும், நகை வியாபாரம், புடைவை வியாபாரம் என்பவற்றிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டமை.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

**(10+ 10 = 20 புள்ளிகள்)**

**8.** பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) கத்முன் நுபுவ்வத்

**கத்முன் நுபுவ்வத்**

- கத்முன் நுபுவ்வத் என்பது இறுதி நபித்துவத்தைக் குறிக்கும்.
- இறுதி நபித்துவம் பற்றிய நம்பிக்கை ஈமானில் ரஸுல்மார்களுடன் தொடர்புபடுகின்றது.
- முஹம்மத் (ஸல்) அவர்களுடன் நபித்துவம் முற்றுப்பெற்றுவிட்டது என்பதற்கு மூன்று வகை ஆதாரங்கள் உண்டு.

**இறுதி நபித்துவத்துக்கான ஆதாரங்கள்**

1. அல்குர்ஆன் ஆதாரம்
   - "முஹம்மத் உங்கள் ஆண்மக்களில் எவருக்கும் தந்தை இல்லை. ஆயினும், அல்லாஹ்வின் தூதரும் நபிமார்களில் இறுதியானவருமாவார்". (33:40)
2. ஹதீஸ் ஆதாரம்
   - "எனக்குப் பின் எந்த நபித்துவமும் கிடையாது, நற்செய்திகளின் அறிவிப்புக்கள் மட்டுமே உண்டு".
   - 'பனூ இஸ்ரவேலர்களை நபிமார்கள் வழிநடத்தி வந்தார்கள் எவரேனும் ஒரு நபி மரணித்து விட்டால் மற்றோரு நபி அப்பொறுப்பில் அமர்த்தப்படுவார். ஆனால், எனக்குப்பின்னர் நபிமார்கள் வரமாட்டார்கள் கலீபாக்கள் மட்டுமே வருவர்".
   - 'என்னுடைய சமுதாயத்தில் முப்பது பொய்யர்கள் வந்து, அவர்கள் அனைவரும் தன்னை நபியென்று வாதிடுகின்ற வரையும் மறுமை நாள் ஏற்படாது' (திர்மிதி)
   - "எனக்கும் ஏனைய நபிமார்களுக்கும் இடையில் உள்ள தொடர்புக்கு உதாரணம், ஒரு மனிதர் ஒரு வீட்டைக் கட்டிமுடிக்கின்றார். அவ்வீட்டிற்குச் சென்றவர்கள் அதைப் பார்த்து அதிசயித்தனர். ஆனாலும் அங்கே பூர்த்தி யாக்காது விடப்பட்டிருந்த சிறிய இடைவெளியைப் பற்றிக் குறை கூறினர். ஆம் (இஸ்லாம் எனும் கட்டிடத்தின்) பூர்த்தியாக்காது விடப்பட்டிருந்த அவ்விடத்தைப் பூர்த்தியாக்க வந்தவன் தான் நான். என்னைக் கொண்டு நபித் தொடர் முற்றுப் பெற்றுவிட்டது" (புஹாரி, முஸ்லிம்)
3. தர்க்க ரீதியான சான்றுகள்

அல்லாஹ் உலகிற்கு நபிமார்களை அனுப்பிய பின்னனியை நோக்குகையில் ஓர் இறைத் தூதரின் பின் மற்றோர் இறைத் தூதரின் வருகைக்கு சில காரணங்கள் இருக்கலாம். அவை வருமாறு:

- எந்த ஒரு நபியும் அனுப்பப்படாத சமுதாயமாக இருக்க வேண்டும்.

  அல்லது இன்னொரு சமூகத்திற்கு அனுப்பப்பட்ட நபியின் தூதுச் செய்தி எட்டாதிருக்க வேண்டும்.
- முன்னைய நபியின் போதனை அழிந்து போயிருக்கவேண்டும், அல்லது திரிபு படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- முன்னைய நபியின் போதனை பூர்த்தியடையாதிருக்க வேண்டும்.
- ஒரு நபிக்கு இன்னொரு நபியின் துணை தேவைப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கூறிய எந்த ஒரு தேவையும் இல்லாமையால் நபி வரவேண்டிய அவசியம் இல்லை.

- இச்சான்றுகளின் அடிப்படையில் பார்க்கும் போது நபி (ஸல்) அவர்களே இறுதி நபி அவருக்கு பின் எந்த நபியும் வரமாட்டார்.
- வரலாற்றில் போலியாக சிலர் தன்னை நபி என பிரகடனப்படுத்தியமை

**(இவைபோன்ற கருத்துக்கள் 5 குறிப்பிடப்பட்டிருப்பின் $1 \times 5 = 5$ புள்ளிகள்)**

(ii) பைத்துல் முகத்தஸ்

- **இது இஸ்லாத்தில் மூன்றாவது அந்தஸ்தைப் பெற்ற புனிதஸ்தலமாகும்.**
- **புனித யாத்திரை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட மூன்று இடங்களுள் பைத்துல் முகத்தஸும் ஒன்றாகும்.**
- **பைத்துல் முகத்தஸை சூழவுள்ள பிரதேசங்கள் அல்லாஹ்வினால் அருள்பாலிக்கப்பட்டுள்ளது.**
- **இங்கு நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை 500 தொழுகைகளுக்கு சமனான நன்மைகள் கிடைக்கும் என ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. (புஹாரி)**
- **பலஸ்தீனில் அமைந்துள்ளது.**
- **முதலில் ஆதம் (அலை) கட்டினார்கள் பின் தூர்ந்து போனபோது இப்ராஹீம் (அலை) இதனை புனர்நிர்மாணம் செய்தார்கள் என்பது பெரும்பாலானோரது கருத்தாகும்.**
- **இஸ்ஹாக் (அலை), யஃகூப் (அலை), சுலைமான் (அலை), மூஸா (அலை) ஸகரிய்யா (அலை), ஈஸா (அலை) போன்ற நபிமார்கள் இதனை நிர்வகித்தனர்.**
- **யஃகூப்(அலை) அவர்களின் குடும்பம் எகிப்துக்கு குடியேறவேண்டி ஏற்பட்டதால் மஸ்ஜிதுல் அக்ஸாவை இழந்தார்கள். பின்னர் தாவூத்(அலை) இதனை மீட்டார்கள்.**
- **கிபி 636ல் கலீபா உமர் (ரலி) அக்ஸாவை பைஸாந்தியரிடமிருந்து மீட்டார்கள்.**
- **பின்னர் சிலுவை வீரர்களால் கைப்பற்றப்பட்டது. சிலுவைப்போரின் போது சிலுவை வீரர்களிடமிருந்து அக்ஸாவை சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி மீட்டார்கள்.**

**(இவைபோன்ற கருத்துக்கள் 5 குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

(iii) இஸ்லாம் முன்வைக்கும் சமூக நீதி

- எல்லா விடயங்களிலும் சமூகத்துக்கு மத்தியில் நீதி பேணப்படல் சமூக நீதி எனப்படும். அதாவது சமூகம், பொருளாதாரம், அரசியல், சட்டம் ஆகிய அனைத்திலும் நீதி பேணப்படல் வேண்டும் என இஸ்லாம் குறிப்பிடுகின்றது.
- இஸ்லாத்திற்கு முன்னைய சமூகங்களில் சமூக நீதியானது தெளிவின்றி காணப்பட்டது. அங்கு மனிதனுக்கு மனிதன் அடிமைப்பட்டு வாழும் நிலையே காணப்பட்டது.
- சமூக நீதி பற்றி அல்குர்ஆன் அல்குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடுகின்றது.

  "முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள் இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்" (அல்மாயிதா : 8)

  "மனிதர்களிடையே தீர்ப்பு கூறினால் நியாயமாகவே தீர்ப்புக் கூறுதல் வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகிறான்"

  (அந்நிஸா: 58)

*More Papers & Online Exams*
www.Edukinniya.lk

- சட்டத்திற்கு முன் அனைவரும் சமன். சட்டம் என்று வரும் போது அங்கு குடும்ப உறவு, இனம், மொழி என்பன பார்க்கப்படுவதில்லை அனைவரும் சமமாக நோக்கப்படுவர்.

  " உங்களுக்கு முன்னால் சென்றவர்கள் ஏன் 'அழிந்து போனார்கள் என்றால் அவர்கள் கீழ் மட்ட மக்களின் மீது சட்டங்களை செயல்படுத்துவார்கள். உயர் குடியினரை விட்டுவிடுவார்கள். எவர் கையில் முஹம்மதின் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலும் நான் அவள் கையை துண்டிப்பேன்." (புஹாரி)

  "எனது அடியார்களே! நான் அநியாயம் செய்வதை என் மீது ஹராமாக்கியுள்ளேன். எனவே, நீங்களும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்துகொள்ளாதீர்கள்". (முஸ்லிம்)

**வரலாற்றில் சமூக நீதிக்கான சான்றுகள்**

- உமர் (ரழி) யின் ஆட்சியில் எகிப்து கவர்னர் அமர் இப்னுல் ஆஸ் (ரழி) யின் மகன் எகிப்தைச் சேர்ந்த கிப்திய சமூக கிறிஸ்தவ இளைஞர் ஒருவருக்கு கடுமையாக அறைந்த போது உமர் (ரழி) பழி தீர்க்கும் சந்தர்ப்பத்தை வழங்கியமை.

**எல்லா இடங்களிலும் நீதியை பிரயோகித்தல்**

- வாழ்வின் எல்லாத்துறைகளிலும் நீதியை கடைபிடிக்குமாறு இஸ்லாம் பணித்துள்ளது.

  உதாரணமாக: வளங்களை பங்கீடு செய்தல், சமமான சந்தர்பங்களை வழங்குதல், உழைப்புக்கு கூலி வழங்குதல், தொழில் வழங்குதல், வறுமை கோட்டிற்கு கிழ் வருவோருக்கு வசதிகளை செய்து கொடுத்தல்.

**முஸ்லிம் அல்லாதவர்களுடன் நீதி**

- எதிரிகளிடத்தில் கூட நீதி செலுத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

  "அநியாயம் செய்யப்பட்டவர்களது பிரார்த்தனையை பயந்துகொள்ளுங்கள். அவர் முஸ்லிமல்லாதவராக இருப்பினும் சரியே. ஏனெனில், அவருக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் எவ்வித திரையும் இல்லை" (அஹ்மத்)

**(இவைபோன்ற கருத்துக்கள் 5 குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

(iv) வஹறப் இப்னு அபீ ஹறப்ஸா

- இவர் ஒரு ஸஹாபி ஆவார்கள்
- இஸ்லாத்தின் தூதை சீனாவுக்கு கொண்டு செல்வதில் முக்கிய இடம் பெறுகிறார்கள்.
- நபி (ஸல்) அவர்களின் தூதுவராக சீனா சென்ற வஹப் இப்னு அபீ ஹப்ஸா (ரழி) கி.பி. 628 இல் இலங்கை வந்ததாகவும், இலங்கை மன்னனுக்கு இஸ்லாத்தை சொன்னதாகவும் கி.பி. 632 இல் அரேபியாவுக்கு திரும்பிச் சென்றதாகவும் 'அல்கியா பாகரி' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாவதற்கு காரணமாக இருந்தார்கள்
- கி.பி. 628 இல் வஹப் இப்னு அபீ ஹப்ஸா (ரழி) சீனாவுக்கு நபி (ஸல்) இன் கடிதத்தை எடுத்து சென்றதாக கலாநிதி ஹமீதுல்லாஹ் குறிப்பிடுகிறார்.

**(இவைபோன்ற கருத்துக்கள் 5 குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

PARCEL NO

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින් නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න